# நீயின்றி எமக்கேது வாழ்வு

## - ஆன்மீக அருட்பாக்கள்





கலாபூஷணம், கவிஞர்
வதிரி கண.எதிர்வீரசிங்கம்

வியாஷன் வெளியீட்டகம், 'ஷத்யகி' ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

திரு. மௌனக்கனி அவர்களுக்கு

அன்புடன்.

10.02.2015.

# நீயின்றி எமக்கேது வாழ்வு

– ஆன்மீக அருட்பாக்கள் –

கலாபூஷணம் – கவிஞர்

**வதிரி கண எதிர்வீரசிங்கம்**

வெளியீடு

**வியாஷன் வெளியீட்டகம்,**

**'ஷத்யகி'**

**ஆவரங்கால் கிழக்கு,**

**புத்தூர்.**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | நீயின்றி எமக்கேது வாழ்வு |
| விடயம் | : | ஆன்மீகம் / பக்திநூல் |
| ஆசிரியர் | : | கலாபூஷணம் – கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் |
| உரிமை | : | எதிர்வீரசிங்கம் சியாம்கிருஷ்ணர் |
| முதற் பதிப்பு | : | 10.11.2014 |
| வெளியீடு | : | வியாஷன் வெளியீட்டகம், 'ஷத்யகி' ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். |
| பிரதி | : | 500 |
| பக்கம் | : | 120 |
| விலை | : | 250/= |

அச்சாக்கம் & வடிவமைப்பு : மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய். 0776688318, 021 226 3099.

| | |
|---|---|
| *Title* | *: Neeyinri Emakkethu Vazhvu Lyrics of Sprituality* |
| *Subject* | *: Spritual Songs* |
| *Author* | *: Kalaboozhan - Poet Vathiry Kana Ethirveerasingam* |
| *Copy Right* | *: Ethirveerasingam Shyamkrishnar* |
| *First Edition* | *: Nov 10, 2014* |
| *Publishers* | *: Viyashan Publication 'Shathyaky', Avarangal East, Puttur.* |
| *Copy* | *: 500* |
| *Page* | *: 120* |
| *Price* | *: 250/=* |

*Layout & Printing : Mathuran Graphics & Offset Printers, Alvai.*

978-955-41950-0-4

இந்நூல் வெளியீட்டிற்கான ஒரு பகுதிச் செலவினை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பிரதேச செயலகம் கரவெட்டி ஊடாக வழங்கி ஊக்குவித்துள்ளது.

## நன்றி

தவமைந்தன்
சிவகணேசன்
வதிரி சி.ரவி
கண.கிருஸ்ணராஜன்
இரா.இராஜேஸ்கண்ணன்
எ.துவாரகா
வானதி மகிந்தன்
மற்றும்
வீரகேசரி
உதயன்
தினக்குரல் (யாழ்)
சுடரொளி
நல்லைக்குமரன் மலர்
மதுரன் கிறாபிக்ஸ் பதிப்பகம்
வியாசன் வெளியீட்டகம்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பூவற்கரையான் பதிக மாலை | 01 - 10 |
| வல்வெட்டி ஞானவைரவர் பஞ்சதுதிமாலை | 11 - 15 |
| வதிரி பூவற்கரைப்பிள்ளையார் மகோற்சவ மான்மியம் | 16 - 20 |
| புண்ணியனே வாருமையா! | 21 |
| நல்லூரின் சேயே! | 21 |
| தேடற்கரிய தேரன்றெரிய எங்குற்றாய்?... | 22 |
| நல்லையிலே தலமழகு! | 23 |
| கீதைதனைச் சொல்வாயோ?... | 24 |
| கோண்டாவில் சிவகாமி அம்பாள் இராஜகோபுர தரிசனம் | 25 - 26 |
| உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!... | 27 - 28 |
| பஞ்சமுகன் பவனிவரும் தேரழகு | 29 |
| வித்தகனே எழுந்தருள்வாய் நேரினிலே! | 30 |
| தீவினைகள் அழித்திடும் நயினையாளே! | 31 |
| அருளல் செய்குவாயே நாகபூசனியே! | 32 |
| வதிரி பூவற்கரையான் உற்சவ உன்னதங்கள் | 33 - 37 |
| அச்சுவேலி காட்டுமலை கந்தனருள் போற்றி! | 38 - 40 |
| இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ! | 41 |
| புங்குடுதீவுப் பதிவாழும் பரமேஸ்வரியே! | 42 - 43 |
| தேவரையாளி நரசிம்ம கதிர்காம ஆலய திருவூஞ்சல் | 44 - 48 |
| நல்லைநகர் பதியாளும் நாயகனே! | 49 - 50 |
| பன்னாலை வைரவரின் பொற்பதியே! | 51 - 53 |
| அராலி ஆவரம்பிட்டி பதியாளே! | 54 - 56 |
| வேழமுகன் தம்பியே வேல்முருகா! | 57 |
| வதிரி பூவற்கரைப்பிள்ளையார் பஜனைப்பாடல் | 58 |
| ஆசிதந்து அருளும் ஆலடியான் | 59 - 61 |
| கோப்பாய் பரமேஸ்வரி அம்பாள் | 62 |
| ஔவையின் தமிழ்மேவ அருள்பவனே! | 63 |
| பூவற்கரையான் தேரழகைக் காணவாரீர்! | 64 |

| | |
|---|---|
| எழில்ரதம் ஏத்தும் வெண்பா | 65 |
| கனிபெற்ற காட்சி காண்போம் பூவற்கரையில் | 66 - 68 |
| மாறாம்புலத்து மாணிக்க விநாயகன் | 69 |
| வரமருளும் வடஅல்வை அரசடி விநாயகன் | 70 - 71 |
| தட்டுக்களரி தலத்துறை நாயகனே! | 72 |
| பொலிகையில் வீரபத்திரர்க்கோர் திருக்கோயில் | 73 |
| கொற்றாவத்தை செட்டிதறை விநாயகனே! | 74 |
| தேவரையாளியின் தேவியம்மா! | 75 |
| தேவரையாளியுறை நரசிம்ம - கதிர்காமனே! | 76 |
| அருட்கடலே குச்சத்து ஞானவைரவனே | 77 |
| அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே! | 78 - 79 |
| அயிட்டியப் புலமுறை முருகா | 80 |
| எள்ளங்குள நாச்சிமார் என வழங்கும் முத்துமாரி | 81 |
| புலோலி பல்லப்பை ஸ்ரீ நரசிங்க வைரவர் திருவூஞ்சல் | 82 - 90 |
| குமுதெணி பதிமேவும் குஞ்சர முகத்தோனே! | 91 |
| அழகுமணித் தேரேறும் அரசடிவிநாயகனே! | 92 - 94 |
| கோடியின்பம் பெருகுதையா! | 95 |
| சித்திரத் தேரேறி வருகின்றான்! | 96 |
| வனப்போடு தீர்த்தமாடி வளமெலாம் தருவாயே! | 96 |
| ஊழ்வினைகள் அழித்திடு ஐங்கரா! | 97 |
| கற்றிட வழிகாட்டும் ஆசானாய்! | 98 |
| மங்காத நற்கல்விதனைத் தாரும்! | 99 |
| பக்தி ஆறோடும் மாலிசந்திப்பதி | 100 |

## வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய நித்திய பூசகர் சிவஸ்ரீ கு.கோகுலன் ஐயா அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

கடந்த 2010 ஆம் ஆண்டு இவ் ஆலயத்திற்கு சமயக் கிரியைகள் செய்வதற்காக நான் வந்த போது, தினமும் சந்தித்த அடியவராக இருப்பவர்தான் கலாபூஷணம் உயர்திரு கண.எதிர்வீரசிங்கம் அவர்கள். காலை, மாலை என தனக்கு நேரம் கிடைக்கின்ற வேளைகளில் தவறாது பூசைகளில் கலந்து கொள்கின்றார். எப்பொழுதும் நெற்றிநிறைய விபூதி பூசியிருப்பது அவருடைய விசேட அம்சமாகும். கவிதை பாடுவதில் வல்லவராக இருக்கின்றார் என்பது அவரைப் பற்றி நான் அறிந்த செய்தி. ஆனால் பூவற்கரை விநாயகர் மீது அவர் ஆக்கித்தந்த பாக்களின் இசைவடிவம் என்னை மட்டுமல்ல கேட்போர் அனைவரையும் பரவசமடையச் செய்யும். நல்லதொரு விநாயகர் அடியவராக, தரமான கவிஞராக, பண்பான மனிதராக அவரை பார்த்து வருகின்றேன். அவர் யாத்த ஆன்மீகப் பாடல்களின் தொகுப்பான " நீயின்றி எமக்கேது வாழ்வு" எனும் கவிதைத் தொகுதிக்கு எனது நல்லாசிகளைச் சொரிவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்தைச் சேர்ந்த கலாபூஷணம் வதிரி கண.எதிர்வீரசிங்கம் இலக்கியத்துறையில் ஈடுபட்டுவரும் ஒருவர், இவருடைய படைப்புக்கள் பல இசைத்தொகுப்புகளில் வெளிவந்துள்ளன. இப்போது இவருடைய ஆன்மீகக் கவிதைகள் "நீயின்றி எமக்கேது வாழ்வு" எனும் நூலாக வெளியிடப்படுகின்றது.

இவருடைய இலக்கியப்பணி தொடரவும் நூல்வெளியீடும் எதிர்கால வாழ்வும் சிறப்புற அமையவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**எஸ்.சிவஸ்ரீ**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

## வாழ்த்துரை

கலாபூஷணம் கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் அவர்களால் வெளியிடப்படுகின்ற "நீயின்றி எமக்கேது வாழ்வு" என்ற ஆன்மீக கவிதைகளின் தொகுப்பிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கலாபூஷணம் கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக தமிழ்க் கவிதை மீது கொண்ட பற்றினால் கவிதைத்துறையுடன் ஊடாடி வருபவர்.

தமிழ்க்கவிதை பாரம்பரியத்தின் ஒரு கூறாக பக்தி இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றில் உள்ளது போல நம் உள்ளூரிலுள்ள வெவ்வேறு வணக்கஸ்தலங்கள் மீதும் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன், இறைவியர் மீதும் கவிதைகளை பாடல்களாக, இசைப்பாடல்களாக வழங்கவேண்டுமென்ற பேரவாவுடன் இயங்கி வருபவர் இவர். இந்த அடிப்படையில் இவரால் வெவ்வேறு திருத்தலங்கள் மீதும் பாடப்பட்ட ஆன்மீக கவிதைகளின் தொகுப்பு "நீயின்றி எமக்கேது வாழ்வு" என்ற மகுடத்தின் கீழ் வெளிவருகின்றது.

இயல்பான கவிதைபுனையும் பேரவாவுடன் தேவார சந்தங்களிலும், இசைப்பாடல்களுக்குரிய சந்தங்களிலும் எழுதப்பட்டுள்ள இவருடைய கவிதைகள் கேட்கும்போது இடர்களின்றி, ஓசை முறிவுகள் அதிகமின்றி, நெருடலின்றி செவியை வருடுகின்றன. இக்கவிதைகளில் விரவி இருக்கும் ஓசைநயம் தனித்துவமாக அவரால் கையாளப்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு ஆலயங்களைப்பற்றியும், ஆலய விழாக்களைப்பற்றியும், ஆலய வரலாறுபற்றியும் அங்குறையும் இறைவன் இறைவியைப் பற்றியும் இவர் பாடிய பாடல்கள் அந்தந்த ஆலயங்கள், விழாக்கள், இறைவன் இறைவியர் தொடர்பான வரலாற்றுப் பின்னணியையும் செவிவழிக் கதைகளையும் சான்றுகளாகக் கொண்டு விளங்குகின்றன. கவிதைகள்

வாசிக்கின்றவர்களுக்கும் கேட்கின்றவர்களுக்கும் விருந்தளிப்பனவாகவும், பக்திசுவை மிகுந்தவையாகவும் விளங்குவது பாராட்டுக்குரியது.

"நல்லையிலே தலமழகு நற்பெயரின் பொருளழகு!
தில்லையிலே கூத்தாடுமுன் தந்தையுமோ அழகழகு!
நல்லகடல் சூழுகின்ற நயினையில் உன்தாயழகு!
சொல்லவரும் கவிதையிலே சந்தமென வருமுன்னழகு!

"கூவியுன்னை அழைக்கின்ற குரலெதுவும் கேட்கவில்லையா!
தேவியரின் செவிகளிலும் தேடிவந்து விழவில்லையா!
மேவிவரும் அடியவரின் மனக்குறைகள் புரியவில்லையா!
தாவிவந்து தாங்கிடவும் தங்கவேலை அனுப்பவில்லையா!"

இவை பதச்சோறுகள்

ஈழத்து பக்தி இசைப்பாடல்கள் ஆன்மீகக் கவிதைகள் என்று நோக்கும்போது எமக்கு ஒரு பாரம்பரியம் இருக்கின்றது. இயல்இசைவாருதி இணுவிலூர் வீரமணி ஐயர், அருட்கவி விநாசித்தம்பி போன்றோரின் வரிசையில் இன்று வெவ்வேறு திருத்தலங்கள்மீதும், இறைவன் இறைவியர்மீதும், இசைப்பாடல்களை பலர் யாத்துவருகின்றனர். அண்மைக்காலமாக அநேக பக்தி இசைப்பாடல்கள் தென்னிந்திய மற்றும் உள்ளூர் இசைக் கலைஞர்களுடைய குரல் இசைநயத்துடன் உருவாக்கப்பட்டு இறுவெட்டுக்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இப்புத்தகத்திலுள்ள பல இசைப்பாடல்களும் அவ்வாறு இசையமைத்து பாடத்தக்கன. இந்தப் பரம்பரையில் ஒருவராகத் தன்னை இனங்காட்டியுள்ள கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் அவர்களின் முயற்சி வெற்றியடைய எல்லாம்வல்ல இறையருளை வேண்டிப் பணிவதுடன் அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

**இ.த.ஜெயசீலன்**
பிரதேச செயலர்
பிரதேசசெயலகம், வடமராட்சி வடக்கு

# வாழ்த்துச் செய்தி

எமது வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலைஞர் ஒருவரது நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்க தரப்பட்டுள்ள வாய்ப்பு தொடர்பாக சிந்தித்துப் பார்க்கின்றேன். ஒருவருடைய இருப்பு அவர் ஆற்றுகின்ற பணி, அவருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரம் என்பவற்றிற்கு அப்பால் அவர் தன்னுடன் வைத்துள்ள "பதவி"யின் காரணமாகவும் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது என்கின்ற கருத்தின் காரணமாக "அறுவடைகளுக்கு" உரிமை பாராட்டுவதில் அக்கறை கொள்ளாதவன் நான். இந்த நூல் வெளியீடு மேற்படி கருத்துக்கு மறுதலையானது. எமது திணைக்கள நிதி அனுசரணையுடன் எமது பிரதேசத்தில் இந்நூல் முதல் முதலாக வெளிவருவது உண்மையிலேயே மனமகிழ்ச்சி தருகின்றது.

கலாபூஷணம் கண. எதிர்வீரசிங்கம் அவர்கள் முயற்சியும் அர்ப்பணிப்பு மனப்பாங்குமுடைய ஓர் எழுத்தாளர். இவருடைய கலைஇலக்கிய ஈடுபாடு வரவேற்கப்படவேண்டியது. இவர் தமது புலமையை பக்தி இலக்கியத்துறையில் வெளிப்படுத்தியுள்ள வகையினை இந்நூலூடாக நீங்கள் காணலாம். இதிலுள்ள பலபாடல்கள் இசையமைக்கப்பட்டு இறுவெட்டுக்களில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவரது ஆன்மீகதுறைசார் நாட்டம் அவரது இஷ்ட தெய்வமான வதிரி பூவற்கரை விநாயகரில் ஆரம்பித்து பின்னர் படிப்படியாகப் பிரவாகித்து விரிவடைந்து சென்றதை "நீயின்றி எமக்கேது வாழ்வு" எனும் இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

மனிதகுலம் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் பெற்ற வெற்றிகளால் வானேறி வால்வெள்ளியைத் தொட்டாலும் இறுதியாக "என்னுடைய கடவுளே" எனச்சொல்லி நிம்மதிப்பெருமூச்சு விடும் இடமாக இருப்பது சந்நிதி ஒன்றுதான். சந்நிதியை சரணடைந்த பக்தன் கண.எதிர்வீரசிங்கம் அவர்களுக்கு இறைவன் நல்லருள் பாலிக்கவும் அவர் சேமநலன் பெறவும் தன் குடும்பத்தினருடன் மனமகிழ்வோடு நெடுங்காலம் வாழவும் வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்தியினை நிறைவுசெய்கின்றேன்.

**அ. சிவஞானசீலன்**
கலாசார உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம்,

# வாழ்த்துரை

கவிதை பாடுவது ஒரு கலை மட்டுமல்ல. மனித உணர்வுகளை நெகிழ்வு படுத்தும் ஒரு உயர்ந்த மந்திரமும் ஆகும். கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் அவர்கள் தனது கவிதைப் புலமையை வெளிப்படுத்தும் முகமாக வெளியிடும் "நீயின்றி எமக்கேது வாழ்வு" எனும் அருட்பாடல்கள் கொண்ட கவிதை நூல் வெளியீட்டிற்கு வாழ்த்துரை வழங்குவதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். பூவற்கரை விநாயகப்பெருமானின் அடியவனாக இருந்து வரும் கவிஞர் அவர்கள் பல ஆலயங்கள் மீது நல்ல ஆன்மீகக் கவிதைகளை யாத்திருக்கின்றார். எங்கள் பூவற்கரையான் மீது கொண்ட ஆழமான பக்தி மேலிட்டால் அவர் பாடிய பாடல்கள் உயர் தரமுடையன. இப்பாடல்களின் இசைவடிவம் ரசித்து ருசிக்கப்படவேண்டியது.

நல்லூர் முருகன் உற்சவ காலங்களில் வருடந்தோறும் யாழ்ப்பாண மாநகர சபையினர் வெளியீடு செய்யும் நல்லைக் குமரன் மலரின் முதற்பக்கத்தை அலங்கரிப்பது இவருடைய கவிதையே. கவிஞரின் கவிதைகளில் காணப்படும் சொற்கோவை, சந்தம், கருத்துக்கள் என்பன வியந்து போற்றப்படவேண்டியவை இவருடைய கவிதைப்புலமைக்கு கிடைத்த உச்ச வெகுமதியே இலங்கை அரசினால் வழங்கப்பட்ட கலாபூஷண விருதாகும். கலாபூஷணம் கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் அவர்களின் சீரிய இலக்கியத்தொண்டு மென்மேலும் செழுமையுற வேண்டுவதோடு அவர் நிறைந்த வாழ்வு வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**சி.க.லோகநாதன்**
முகாமையாளர்
வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலயம்,
கர வெட்டி.

## வாழ்த்து

நாவிலெழும் நல்லூற்றாய் நயந்தெழும் வார்த்தைகளால்
பாவினிக்க பணிந்து புகழ்பாடும் கவிச்சிங்கம்
தேனிசைக்கும் பாடல்களை திறமையுடன் படைக்கின்ற
கலாபூஷணம் கவிஞர்வதிரி கணஎதிர்வீரசிங்கம் வாழியவே!

பூவற்கரையான்மேல் பூச்சொரிந்ததுபோல் கவிபாடி வைத்தோன்
காவல் தெய்வமென கதிர்காம நரசிம்மனுக்கும் பாடல்தந்தோன்
ஆவலுடன் நல்லையம்பதியானுக்கும் நற்பாடல் தந்திட்டோன்
தேமதுரத் தமிழிசையைச் சேர்த்துதந்த நற்பாவலனே நீவாழி!

ஆலயங்கள் பலவற்றை பக்தியிறைப் பாடல்களாய்தந்து
காலமிதில் கவிந்துருகும் கவிமகனார் எதிர்வீரசிங்கம்
தூய்மையுடன் "நீயின்றி எமக்கேது வாழ்வு" எனத்
துலங்கவைத்தார் கவிஞனெனச் சிறப்பாலிங்கு!

பாடுவோர்க்கு சுவைசேர்த்து பாடல்கள் கூடும்
கூடியே இலயிப்போர்க்கு குளிர்மையே சேரும்
பாடலின் செழிமையெல்லாம் பசுமையாய் துலங்கும்
பாவாணன் எதிர்வீரசிங்கம் கவிமணி வாழியவே!

**கவிஞர் வதிரி சி.ரவீந்திரன்**

## விருதுகள் பெற்றோய்! வாழி!

எழுதிடும் கவிதைகள் இலக்கண முறையோடு
வழுக்களின்றி சொல்நயம் விளங்கிடவே! - தொழுகின்ற
ஆலயங்களை கீர்த்தனைகளால் அலங்கரித்து இசையூட்டி
சாலமுற தருவதேயிவர் சிறப்பு

செந்தமிழின் நாதங்கள் செவிகளில் தேன்பாய்ந்திட
வந்தமரும் நிகழ்விலேயே வனப்பான கவிதைகளை
விந்தையுடன் எழுதுகின்ற வீரமிகு சிங்கமே!
வந்தனங்கள் பல சொல்லி வாழ்த்துகிறேன் வாழிவாழி!

இலகுதமிழ் வரிகளிலே இணையற்ற கவிஞரே!
தலங்கள் பலமேவி தருவாயே கிர்த்தனைகள்
உலகம் அறியும் உன்னினிய பாடல்களை!
இலங்கிடும் தாரகையே! இலக்கியப் பேரொளியே!

திருவூஞ்சல் பாக்களுடன் தித்திக்கும் மெல்லிசைகளும்
திருமண வாழ்த்துக்களும் திருவிழாக் கவிதைகளும்
பெருமிதமாய் தருகின்ற பேரன்புக் கலாபூஷணமே!
கருத்துக்களினால் உயிரூட்டும் கவிஞனே வாழிவாழி!

சஞ்சிகைகள் தினசரிகள் சிறுவர் மலர்களென
அஞ்சிடாது எழுதுகின்ற அருங்குணனே! - நெஞ்சினில்
கருதிடும் எண்ணங்களை கவியாய் வடித்திங்கு
விருதுகள் பெற்றோய்! வாழி!

**அல்வையூர் கவிஞர் சிவகணேசன்**

# அறிமுகவுரை

"நீயின்றி எமக்கேது வாழ்வு" என்னும் பெயர் தாங்கி வெளிவருகின்ற இந்தக் கவிதை நூலிற்கு அறிமுக உரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நீர் சொரியும் விழிகளிலே என்னும் இறுவெட்டின் பாடல்களை அழகுடன் உருவாக்கிய கலாபூஷணம் கவிஞர் வதிரி.கண.எதிர்வீரசிங்கம் அவர்கள் பல்துறை ஆளுமைகள் கொண்ட ஒருவராகவும் சிறந்த கலைஞராகவும் ஆன்மீகச் சிந்தனைகள் கொண்டவராகவும் விளங்கி வருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

கடந்த காலங்களில் எனது இசையமைப்பில் உருவான பல தெய்வீக இசைப்பாடல் இறுவெட்டுகளிற்கான பாடல்களைக் கன கச்சிதமாக இயற்றித் தந்தவர். இவரது பாடல்களிற்கு இசையமைப்பது என்பது இனிமையான பொழுதாகவே அமைந்திருக்கின்றது. ஏனெனில் சந்தம் பிசகாத இவரது கவிதைகள் இசையோடு தானாகவே இயைந்து விடுகின்றன.

இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் நாற்பத்து ஐந்திற்கும் அதிகமான கீர்த்தனைகள் ஈழத்து இசை மரபில் நிரந்தரமான இடம் பிடித்துக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அவற்றுள் பல பாடல்கள் ஏற்கனவே பலரால் பாடப்பட்டவை என்பதும் இறுவெட்டுக்களில் வெளியாகி உள்ளன என்பதும் குறிப்பிடத் தக்க முக்கியமான விடயங்கள் ஆகும்.

இவரது கலைப்பணி தொடர எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**த.றொபேட்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
நுண்கலைக் கழகம்
யாழ் பல்கலைக் கழகம்.

# அணிந்துரை

கரவெட்டி வதிரியைச் சேர்ந்த ஆன்மீகக் கவிஞர் சிவத்திரு.கணபதிப்பிள்ளை எதிர்வீரசிங்கம் அவர்களின் "நீயின்றி எமக்கேது வாழ்வு" என்னும் தலைப்பில் வெளிவரும் அருட்கவிதை நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடவுளர்மீதான பக்தி பனுவல்களை இயற்றுவது எல்லோருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. அப்பாக்கியம் தவப்பலன்மிக்க சிலருக்கே கிடைக்கின்றது. அந்தவரிசையில் ஆன்மீகக்கவிஞர் எதிர்வீரசிங்கம் அவர்களும் ஒருவர் என்பது எமது கணிப்பீடாகும்.

இவ்வான்மீகக் கவிஞருடைய அருட்கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் உள்ள முக்கியமான திருத்தலங்களில் உறையும் கடவுளர்களின் மகத்துவம், தலச்சிறப்பு, வரலாற்றுக்குறிப்புகள், திருவிழாச்சிறப்புக்கள் என்பவற்றை நன்கு புலப்படுத்துவதாகத் திகழ்கின்றது.

கவிஞரது பக்திக் கவிதைகளை நுணுகி நோக்கும் போது இவரின் சிறந்த இசைஞானத்தையும் அறியமுடிகின்றது.

இவரின் பாடல்கள் இவரிடமுள்ள சிறந்த கவியாற்றலையும் பாடலாக்கத் திறனையும் வெளிப்படுத்துகின்றது. பாடல்கள் பக்தியின்

கனிவைத் தருகின்றன. தலங்களின் பெருமைகளையும் வரலாற்றில் அவற்றின் சிறப்பினையும் கூறுகின்றன. தான் பாடிப்பரவும் தெய்வங்களிடம் மக்களின் வாழ்வில் மிஞ்சிநிற்கும் துயரங்களுக்கு வழிகேட்கும் கவிஞரின் பாடல்வரிகள் சமூக நலன் நோக்கியவை.

கவிஞர் அவ்வப்போது நல்லைக்குமரன் மலர், மற்றும் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்ட கவிதைகள் இப்பொழுது ஒரு நூலாக வெளிவருவது திருவருட் செயலாகும் பாராட்டுதலுக்குரியது.

இவர் இதுபோன்ற அருட்கவிதைகளை மென்மேலும் எழுதி வெளியிடுவதற்கு இறையருள் கிடைக்க வேண்டுமென எம்குல தெய்வமாகிய நயினை ஸ்ரீ நாகபூசனி அம்பாளின் பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் டாக்டர் .மா.வேதநாதன்**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## என்னுரை

இன்று ஒரு கவிஞன் என்றால் அவன் சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்ற சமூகக் கொடுமைகளை 'மாத்திரமே' பாடவேண்டும் என்ற ஒரு கருத்தே நிலவுகின்றது. அந்த நோக்கம் பிழையல்ல. ஆனால், ஒரு ஆன்மீக விடயத்தையோ, தெய்வீக அருளையோ எழுதுபவன் கவிஞனல்ல என்று கூறமுற்படுவது ஒரு தெளிவற்ற - அறிவை மறுதலித்த கருத்தாகும். இக் கருத்தை மீளமீள வலியுறுத்த முற்படுபவர்கள் அறிவுத் தெளிவுடன் சிந்திப்பவர்கள் என்று எப்படிச் சொல்லமுடியும்?

தமிழிலக்கிய வரலாற்றில் செழுமையான இலக்கியங்கள் எழுந்தகாலம் பல்லவர் சோழர்காலங்கள். நாயன்மார், ஆழ்வார்கள் அருணகிரிநாதர் போன்றவர்களின் தோத்திரப்பாடல்கள் இன்றுவரை அழியாப்புகழுடன் விளங்குவன. திருவாசகத்தின் சிறப்பைக் கருதித்தான் ஜீ. யூ.போப் அதனை மொழிபெயர்த்தார். வெறுமனே அருட்பாடல்கள்தான் என்று யாரும் விட்டுவிடுவதில்லை. வீரம், காதலைப் பாடிய சங்ககாலத்தில் எழுந்த பாடல்களில்கூட தெய்வத்துதிகள் தோன்றித்தான் இருந்தன. ஈழத்திலும் போர்க்கால அவலங்களைப் பாடிய எத்தனையோ கவிஞர்கள் " நல்லைக் கந்தன்" போன்ற தெய்வங்களையும் பாடினர். தெய்வங்கள் மீது வசைக்கவி பாடிய புலவர்கள் வாழ்ந்த காலத்தில் தலபுராணங்களும், சிறப்புமிக்க தெய்வத் தோத்திரங்களும் தோன்றாமல் இருக்கவில்லை. இது காலத்தின் கட்டளை. இறையருள் என்ற ஒன்றும் ஆன்மீக அனுபவங்களும் காலம் கடந்து நித்தியமாகின்றன.

நித்தியமான ஒன்றை பாடுவதால் ஒருவனுக்கு கிடைக்கும் ' திருப்திநிலை' மேலானது. அது உள்ளத்தில் தூய்மை, தெளிவு என்பவற்றைத் தருவதுடன், கடந்தகாலத்து வாழ்வின் தவறுகளைக் குறித்து ஆழச் சிந்தித்து சரியான தடத்தினை வகுக்க உள்ளிருந்து வழிகாட்டும் ஒரு சக்தியாக மாறுகின்றது. இதனை நான் உணர்கின்றேன். இதனால், எனது கவியெழுதும் நாட்டம் எம்மைச்

சூழவிருந்து அருள்பாலிக்கும் தெய்வங்களின் பெருமை பாடுவதில் குவிகின்றது.

வதிரி பூவற்கரைப் பிள்ளையாரின் நிழலில் வாழ்ந்துவரும் எனக்கு அவன் அருளிய சந்தர்ப்பத்தால் " நீர் சொரியும் விழிகளிலே" என்ற இறுவெட்டிலடங்கும் பாடல்களை அவன் மீது பாடினேன். அதனைத் தொடர்ந்து என் விருப்பாலும், கோயில்களோடு தொடர்புபட்டவர்களின் வேண்டுதலாலும் நான் பாடிய பாடல்கள் இங்கு நூல்வடிவிலே தொகுக்கப்படுகின்றது. இப்பாடல்களில் சில ஏற்கனவே இறுவெட்டுக்களில் இடம்பெற்றவை. சில புதியவை. எவ்வாறாயினும், என்னுள் மேலிடும் இறைபக்தியை வெளிப்படுத்தும் மார்க்கமாக இது அமைந்தது. இதில் எனக்கு திருப்தியும், சித்திப்பும் கிடைக்கின்றது.

இந்தத் திருப்திநிலையின் பின்புலத்தில் பலரின் பங்களிப்புக்கள் நிறைந்துள்ளன. இந்த வெளியீட்டுக்கான ஒருபகுதி நிதியினை பெற்றுத்தந்தமைக்காக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை கௌரவ அமைச்சர் த.குருகுலராஜா, செயலர் உயர்திரு சி.சத்தியசீலன், பிரதிப்பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலர் திரு.எஸ்.சிவஸ்ரீ, கலாசார உத்தியோகத்தர் திரு.ஏ.சிவஞானசீலன் ஆகியோருக்கும் நூல் வெளியீட்டுக்கு உதவிய அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

**வதிரி கண.எதிர்வீரசிங்கம்**

### பூவற்கரையானே!



நாவதனை ஆட்சிசெய்து நற்றமிழ் ஈய்பவனே!
பாவதனை நானெழுதப் பொருள்தேடி தருபவனே!
பூவற்கரை பதிமேவும் பிள்ளையாரே இந்நூலின்
காவலனாய் வந்திடவே கைகூப்பித் தொழுகின்றேன்!

### நரசிங்க – முருகா!





எழுதுகோல் நானெடுத்து ஏட்டினிலே எழுதுமுன்
தொழுவேனே உன்பாதம் தேவரையாளி ஆதிமுதலே!
முழுமதியாய் நான்திகழ முன்நிற்பாய் நரசிங்கமுருகா!
விழுதுகளாய் தாங்கிடவே வந்திடுவாய் என்னுள்ளே!

# பூவற்கரையான் பதிகமாலை

## ஆவலுடன் பாடுகின்றேன் ஐங்கரனே!

இராகம் : ஹம்சத்வனி

தாளம்: ஆதி

### தொகையறா

ஆதிசைவத் தமிழுடனே அறந்திகழும் நல்லறமாம்
ஓதுமுயர் பூவற்கரையின் ஓங்கார நாயகனே!
வேதியர்கள் சூழ்ந்து வரும் வேழமுகத்து விநாயகனே!
பாதமலர் பணியுமென் பாவினிலே நிறைவாயே!

### பல்லவி

ஆவலுடன் பாடுகின்றேன் ஐங்கரனே! வதிரி
பூவற்கரை பொற்பதியின் மூலவனே!

- ஆவலுடன்...

### அனுபல்லவி

காவலனாய் கதியருளும் காரணனே! எந்தன்
பாவினிலே பொருளாகும் வாரணனே!

- ஆவலுடன்...

### சரணம்

அழகொளிரும் ஆலயத்தை காண்கையிலே - நெஞ்சில்
ஆனந்த பரவசமும் பொங்குதையா!
வளங்களுடன் பதியென்றும் மிளிர்ந்திடவே - குஞ்சர
வதனனே அருளமுதம் தாருமையா!

- ஆவலுடன்...

எம்மினிய பக்தரெலாம் மனமுவந்து - மகா
கும்பாபிஷேகம் செய்துனையே தொழுகின்றோம்
வம்சமெல்லாம் கல்வியில் ஓங்கிடவே - மகா
கணபதியே ஆசானாய் வாருமையா!

- ஆவலுடன்...

## அதிகாலை உந்தனது மணியோசை

இராகம் : பூபாளம் தாளம் : ஆதி

### பல்லவி

அதிகாலை உந்தனாலய மணியோசை - மெல்ல
காதிலே வந்து துயிலெழுப்பும் இசைபாடி
துதிப்போமே பூவற்கரையான் புகழ்பாடி - உள்ளத்
திரைதனிலே வந்துதிக்கும் வினைபோக்கி

- அதிகாலை...

### அனுபல்லவி

மௌனத்தின் உட்பொருளே! ஆனைமுகனே! நல்ல
மோதகப் பிரியனே! பானை வயிற்றோனே!
ஞாலத்தில் நின்தயவில் வாழ்வதற்கே - வெல்லும்
ஞானமும் யோகமும் தருபவனே!

- அதிகாலை...

### சரணம்

கணங்களுக்கு அதிபதியே கணபதியே!
கந்தனுடன் வந்தருளும் குணநிதியே!
வணங்கிடவே தோப்புக் கரணமிட்டே
விடிகாலை கருமங்கள் தொடங்குவோமே!

- அதிகாலை.....

மாங்கனி பெற்றிடவே மதிநிறைவாகி - நீயும்
மாதாபிதா உலகென்று உணர்த்தி நின்றாய்!
தாங்கொணா துயருடன் நாமிருக்க - பஞ்ச
கரந்தாங்கி அபயமென்றும் அளித்துநிற்பாய்!

- அதிகாலை...

## கோடியின்பம் பெருகுதையா!

இராகம் : கௌரிமனோஹரி தாளம் : ஆதி

### பல்லவி

கோடியின்பம் பெருகுதையா கொடியேறும் நாள்தனிலே
நாடியதை பார்த்திடவே நீர்சொரியும் விழிகளிலே!

கோடியின்பம்...

### அனுபல்லவி

வேதியர்கள் சூழ்ந்து நின்று மந்திரங்கள் ஓதிடவே
நீதியுயர் பூவற்கரையானின் ஏற்றிவைக்கும் கொடிகாண

கோடியின்பம்...

### சரணம்

தம்பமதை தந்துநின்றார் முப்பொருளும் துலங்கிடவே!
அம்பிகையின் புதல்வனிற்கு மஹோற்சவம் தொடங்கிடவே!
வெம்புகின்ற அடியவரும் பரவசமாய் திகழ்ந்திடவே!
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனின் கொடிகாண !

கோடியின்பம்...

ஆடிவரும் போதினிலே உன்னழகு கோலமதை
ஆயிரம் மலர்களாலே அலங்கரித்து பார்ப்போமே!
பாடிவரும் பஜனையிலே உன்புகழை சொல்லிடவே
பாவருளித் தருபவனின் கொடித்தம்பம் காணவிங்கே!

கோடியின்பம்...

## ஆடிவாறான் ஓடிவாறான்

இராகம்: மாயாமாளவகௌளை　　　　தாளம் : ஆதி

**பல்லவி**

ஆடிவாறான் ஓடிவாறான் காடுமலை தேடிவாறான்
பாடறிந்து வினைகளையும் வேட்டைதனை ஆடவாறான்!

\- ஆடிவாறான்...

**அனுபல்லவி**

மாவடியில் மகிமைதரும் அண்ணமார் ஆலயத்தில்
காவடிகள் பறையொலிகள் புடைசூழ அம்புவில்லுடனே!

\- ஆடிவாறான்...

**சரணம்**

ஆட்டமாடி பக்தரெலாம் ஆனந்தம் பொங்கிடவே!
கூட்டத்தில் அவன்நாமம் பரவசமாய் சொல்லிடவே!
நாட்டமுடன் நல்லனவே செய்திடவே பிள்ளையாரும்
நாடியெங்கள் குறைபோக்க கைகளிலே அம்புவில்லுடனே!

\- ஆடிவாறான்...

வேப்பிலையும் கற்பூரச் சட்டிகளும் தொடர்ந்துவர
விருப்புடனே பாலரெலாம் சல்லாரி இசையெழுப்ப
பூவற்கரை தலம்விடுத்தே பார்வதியாள் மைந்தனிவன்
காவலனாய் குதிரைமீதே அம்புவில்லும் ஏந்தியிங்கே!

\- ஆடிவாறான்...

## அழகுரதம் அமைந்திடவே அனுக்கிரகம்

**இராகம்: நாட்டைக்குறிஞ்சி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

அழகுரதம் அமைந்திடவே அனுக்கிரகம் - தந்து
அடியவரை ஆட்கொள்ளும் அப்பனே!

- அழகுரதம்...

**அனுபல்லவி**

தலமதிலே தனிச்சிறப்பு தோன்றிடவே!
தலைமகனே வந்து அருளாட்சி செய்வாயப்பா!

- அழகுரதம்...

**சரணம்**

சித்திரத் தேரில் வருபவனே - என்றும்
சித்திகள் அள்ளித் தருபவனே!
புத்தியிலே உறைபவனே! ஆனைமுகனே! எங்கள்
பூவற்கரை யிலமர் பாலகனே!

- அழகுரதம்...

வடம்பிடித்து நாமெல்லாம் செல்கையிலே - மன
வன்மமெலாம் துகளாகி போகுமையா!
தேரசைந்து வருகின்ற வீதியெங்கும் - பண்
தேவார ஒலியெலாம் கேட்குதையா!

- அழகுரதம்...

சிற்பங்கள் கதைபகரும் தேரமைத்து - உந்தன்
சிங்கார எழுந்தருளும் காட்சிகண்டோம்!
கற்பக தருவாகி வரமனைத்தும் - தொந்தி
கணபதியே தந்திடவே வணங்குகின்றோம்.

- அழகுரதம்...

# மெய்யுருகி மனம் நெகிழ

இராகம் – ரேவதி தாளம்: ஆதி

### பல்லவி

மெய்யுருகி மனம்நெகிழ பருகிடும் தீர்த்தமையா - உன்னால்
நெய்யுருகி நீராகும் நிலையிலென் சுமைகளையா!

மெய்யுருகி...

### அனுபல்லவி

இதயத்தில் உனைவைத்து பூஜைகள் செய்கின்றேன் - சூரிய
உதயத்தில் உன்வதனம் கண்டுகண் விழிக்கின்றேன்!

மெய்யுருகி...

### சரணம்

ஈசான மூலையிலே தீர்த்தமாடும் ஏரம்பனே!
வாசமலர் சோலையாம் பூவற்கரையின் காரணனே!
ஈசனுடன் உமையவளும் காட்சிதரும் பிள்ளையே!
இன்ப விநாயகனே! அருளாலே நிறைந்திடுவாய்!

மெய்யுருகி...

கண்களிலே வீசுகின்ற ஒளியாலே - பக்தி
கனிவோடு நாட்களையே கழிக்கின்றோம்
ஒன்றுபட்டு பக்தரெல்லாம் அரோகராவென்றே - சொல்லி
ஓங்காரன் தீர்த்தத்திலே குளிக்கின்றோம்.

மெய்யுருகி...

## கலைநிறை கணபதியே!

இராகம் :- மிஸ்டசிவரஞ்சினி தாளம் : ஆதி

### பல்லவி

கலைநிறை கணபதியே- தஞ்சம்
கோரினோமே! நின்னருட் பதிதனிலே!

- கலைநிறை...

### அனுபல்லவி

நிலைபெறும் வாழ்வுதனையே - அச்சம்
நீக்கியே தந்தருள் பக்திகணபதியே!

- கலைநிறை...

### சரணம்

கோடியின்னல் சூழுகின்ற போதினிலே
கூவியுன்னை அழைப்போமே நேரினிலே!
தேடிவந்து வினையாவும் வேரறுப்பாய்
தேவனே! பூவற்கரை புண்ணியனே!

- கலைநிறை...

வீடிழந்து பொருளிழந்து உறவிழந்தே - உன்னை
நாடிவந்து சரண்புகுந்தே துயரிழந்தோம்!
கூடிநின்றே சந்நிதியை தொழுதிடவே - கண்ணில்
காட்சிதந்து அகதிநிலை மாற்றிநின்றாய்!

- கலைநிறை...

கஜமுகா சுரனையன்று அழித்தவனே - தேவர்
குலந்தனை முன்பொருகால் காத்தவனே!
முக்கண்ணனே பூவற்கரையின் முத்தானவனே - தமிழ்
மாந்தரையே மீட்டிடையா ஓங்காரனே!

- கலைநிறை...



கண. எதிர்வீரசிங்கம்

## யாரை இனி நம்புவதோ!

இராகம்: அகீர்பைரவி　　　　தாளம் : ஆதி

### பல்லவி

யாரைஇனி நம்புவதோ கணேசா! - எங்கும்
யாதுமாகி நிற்பவனே உனையன்றி!

- யாரைஇனி...

### அனுபல்லவி

போரை இங்கு பார்க்கின்றேன்- துடிதுடிப்
போரைக் கண்டுதினம் வாடுகின்றேன்!
தேவரெலாம் போற்றிநின்ற வித்தகனே- எழில்
பூவற்கரை கோயில் கொண்ட தத்துவனே!

- யாரைஇனி...

### சரணம்

பாரிலெங்கும் போரொலிகள் கேட்கவில்லையா - உன்
பார்வையிலே அவலங்கள் தோன்றவில்லையா!
ஊரிலுள்ள அகதிகளை காணவில்லையா- என்
உளமறிந்து உன்தயவும் தரவில்லையா!

- யாரை இனி...

இருகரம் கூப்பியுனை கெஞ்சுகின்றேன் - என்
உணர்வுகள் அழிந்திடுமோ அஞ்சுகின்றேன்!
கரமைந்தும் இருந்தென்ன அங்குசனே- இரு
கரந்நீட்டி எம்நிலையை பாராயோ!

- யாரை இனி...

## வீதியெங்கும் தோரணங்கள் நிறைகுடங்கள்

இராகம்: மத்தியமாவதி தாளம்: ஆதி

**பல்லவி**

வீதியெங்கும் தோரணங்கள் நிறைகுடங்கள் பெருவிழா!
ஆதிசிவன் மூத்தவனின் மணவாளக் கோலவிழா!

- வீதியெங்கும்...

**அனுபல்லவி**

வதிரியிலே மக்களெலாம் பக்தியுடன் காணும் விழா
மதிநிறைந்த இளைஞரெலாம் பிள்ளையாரை சுமக்கும்விழா

- வீதியெங்கும்...

**சரணம்**

வீடுதோறும் விநாயகனின் அருளாட்சி புரியும்விழா
வாசல்தோறும் கோலமிட்டே வரவேற்கும் திருவிழா!
தேடுகின்ற செல்வமெலாம் அவனாலே பெருகும்விழா!
தேவர்குலம் காத்துநின்ற லம்போதரனின் மகாவிழா!

- வீதியெங்கும்...

வானுமிங்கு உந்தனுக்கு குடைபிடிக்க!
வளர்மதியும் இங்குனக்கு ஒளிகொடுக்க!
கதிரவனின் கதிர்களெலாம் மலர்தொடுக்க
வதிரியிலே விக்கினங்கள் அழிந்தொழிய!

- வீதியெங்கும்...

## இசையோடு உனைப்பாட வருவாயப்பா!

இராகம் : ஹம்சாநந்தி தாளம்: ஆதி

### பல்லவி

இசையோடு உனைப்பாட வருவாயப்பா - தமிழ்
இழையோடும் சந்தமெலாம் தருவாயப்பா!

- இசையோடு...

### அனுபல்லவி

திசைநான்கும் என்பாடல் கேட்டிடவே - நல்ல
இசைஞான லயமாகி ஒலிப்பாயப்பா!

- இசையோடு...

### சரணம்

நாதத்தின் தலைவனின் முதற்கொழுந்தே - எழில்
பூவற்கரை பதிதனின் குலக்கொழுந்தே!
மாதவமே செய்துனையும் பெற்றோமே - கவி
மேவிடும் பாங்கினையும் கற்றோமே!

- இசையோடு...

ஆறுதலைத் தருபவனே ஐங்கரனே - குன்றின்
ஆறுமுக சுவாமிக்கு மூத்தவனே!
மாறுதலை நின்னருளால் காண்போமே - என்றும்
மங்களமே தந்திடவே வாழ்வோமே!

- இசையோடு...

# வல்வெட்டி ஞானவைரவர் பஞ்சதுதிமாலை

இராகம் :- ஷண்முகப்பிரியா    தாளம் :- ஆதி

### தொகையறா

ஆர்ப்பரிக்கும் கடலோசையும் ஆலரசுகளுடனே புடைசூழவரும்
சீர்பதியாம் கம்பர்மலையின் சிறப்புயர்ந்த ஆலயமமர்ந்து - வேரறுத்து
வினைகளைய விளங்குமுயர் ஞரனவைரவரே கீர்த்திமிகு
செயல்களெல்லாம் கண்முன்னே தந்தருள்வாயே!

### பல்லவி

கீர்த்திநிறை வாழ்வுதனை தருபவனே! - என்றும்
நேர்த்தியுடன் வணங்கிடவே அருள்பவனே!

- கீர்த்திநிறை...

### அனுபல்லவி

சீர்பதியாம் கம்பர் மலைதனிலே! மூல
மூர்த்தியாய் வீற்றிருக்கும் ஞானவைரவரே!

- கீர்த்திநிறை...

### சரணம்

கையினில் அருள்நிறை சூலமுடனே - எம்மை
உய்யவழி காட்டிநிற்பாய் நேயமுடனே
மெய்யுருக காட்சிதரும் காவலனே! - மேன்மை
மேதினியில் நாளெல்லாம் ஓங்கிடவே!

- கீர்த்திநிறை...

கல்வியுடன் செல்வமெலாம் சேர்ந்திடவே! - நல்ல
குருமுதலாய் பதிதனிலே வாய்த்தவனே!
வல்லவர்கள் என்றெம்மை பிறர்போற்றிடவே!- வெல்லும்
வரமனைத்தும் தந்துநிற்கும் மூலவனே!

கீர்த்திநிறை..



கண. எதிர்வீரசிங்கம்

இராகம் :- ஹம்சத்வனி | தாளம் :- ஆதி

### பல்லவி

உனக்கொரு ஆலயம் அமைத்தோமே! அதில்
வனப்புறும் சிற்பங்கள் சமைத்தோமே!

- உனக்கொரு...

### அனுபல்லவி

விருட்சங்கள் நிழலாகும் சோலையிலே — அருள்
தருகின்ற திரிசூல(த்தின்) எழில்காண!

- உனக்கொரு...

### சரணம்

ஆலமரம் அரசமரம் குடைபிடிக்க — எழில்
வயல்வெளியின் காற்றுவந்து தாலாட்ட
சூலமொடு கபாலமும் கரமேந்தி — ஞான
நிலையாகி நிற்பவனே வைரவரே!

- உனக்கொரு...

அலங்கார வளைவுடனே மண்டபங்கள் - சூழ
அழகாக காட்சிதரும் தேவனே!
நலமோடு ஊர்சிறந்து விளங்கிடவே! — வாழ
நயமோடு ஆன்மீகம் பெருகிடவே!

- உனக்கொரு...

அகிலமே அறிந்திடும் ஊரப்பா — எங்கள்
அன்பர்கள் வள்ளல்கள் தானப்பா!
அறம்நிறை கம்பர் மலைதனிலே — பொங்கும்
அவலங்கள் நீங்கிடவே விருப்புடனே!

- உனக்கொரு...

இராகம் :- ஹிந்தோளம் தாளம் :- ஆதி

### பல்லவி

செம்மணிச் செல்வனை நினைத்தாலே — என்றும்
எம்மனம் நிறைந்திடுமே அருளாலே!

- செம்மணிச்...

### அனுபல்லவி

ஆடையொடு அணிகலன்கள் தருவோமே — நல்ல
வாடைதரும் மலர்மாலைகள் சூட்டுவோமே!

- செம்மணிச்...

### சரணம்

எத்தனை வடிவினிலே நீயிருந்தாலும் - உந்தன்
நித்திய கோலமென்றும் அழகாகுமே!
சித்தத்தில் சிந்திக்கும் தேனாகியே! எங்கள்
சொத்தான சிவமூர்த்த நிலையானவனே!

- செம்மணிச்...

வேதங்கள் யாவிலுமே முழுமுதலாகியே! — வரும்
வேடங்கள் விளக்கிடும் சிவபெருமானையே!
நாதனாய் நாம்வணங்கும் நிர்மலனாகியே! பெரும்
சோதனைகள் வேதனைகள் தீர்த்திடவேண்டியே!

- செம்மணிச்...

இராகம் :- வஸந்தா                                தாளம் :- ஆதி

## பல்லவி

திருக்கரம் காட்டுமென்றும் அபயமதை – தினம்
திருக்கோயில் வருகையிலே நீக்கும் பயந்தனை!

- திருக்கரம்...

## அனுபல்லவி

சேவடிகள் தொழுதிடவே பெருங்கூட்டம் - உன்னை
ஆவலாய் இசைத்திடவே அகலும் மனவாட்டம்!

- திருக்கரம்...

## சரணம்

பிரம்மனின் அகந்தைதனை அழித்தவனே! – அவன்
சிரசினை கொய்ந்த உக்கிர வைரவரே!
வரம்வேண்டி வருவோரை அணைப்பவனே! – சிவன்
திருமேனி வடிவான ஞானவைரவரே!

- திருக்கரம்...

அம்மணமாய் நிற்கின்றாயே உனக்காகுமோ! – தேவா!
கம்பர்மலை அமர்ந்திருத்தல் துணையாகுமே!
எம்மினத்தை ஆட்கொள்வாய் அருள்வடிவே! – பூவாய்
எம்மனத்தில் மலர்ந்திடுவாய் திருவுருவே!

- திருக்கரம்...

இராகம் :- சிந்துபைரவி தாளம் :- ஆதி

### பல்லவி

தித்திக்கும் தமிழாலே புனைகின்றேன்! - உன்னை
எத்திக்கும் அறிந்திடவே பாடுகின்றேன்! - நான்

- தித்திக்கும்...

### அனுபல்லவி

முத்தொழிலின் வடிவெடுத்த வைரவரே! எங்கள்
சொத்தானாய் எழில்கம்பர் மலைதனிலே!

- தித்திக்கும...

### சரணம்

படைத்தலைப் புரிந்திடவே உடுக்கையை ஏந்தினாய்!
காத்தலைச் செய்திடவே கபாலத்தை தாங்கினாய்!
அபயம்தரவே முத்தலைச் சூலமேந்தி நிற்பவனே!
ஒடுக்கலை தந்திடவே மேனியெங்கும் நீறணிந்தவனே!

- தித்திக்கும்...

எத்தனை பிறப்பாகிலும் உன்னடியே தொழுவேனே!
சிந்தனை உனையன்றி வேறொன்றும் அறியேனே!
வந்தனை செய்யநிதம் வருமடியார் மனங்களிலே!
வந்துறைய வேண்டியுனை அழைக்கின்றேன் ஞானவைரவரே!

- தித்திக்கும்...

## வதிரி பூவற்கரை பிள்ளையார்

## மகோற்சவ மான்மியம்

**கொடியேற்றம். (1ம் நாள்) 07.08.2008**

முப்பொருளும் துலங்கிடும் புண்ணிய கொடியேற்றம்!
மகிமைதரு பூவற்கரை பிள்ளையின் கொடியேற்றம்!
இப்புவியில் இடர்நீக்கும் ஏகநந்தனின் கொடியேற்றம்!
ஈசனுமை பாலகனின் இனிமைதரு கொடியேற்றம்!
செப்புமுயர் ஆடிதனிலே சிங்கார கொடியேற்றம்!
சித்தியொடு முத்திதரும் சிறப்புயர் கொடியேற்றம்!
காத்தருள வதிரியுறை கணபதியின் கொடியேற்றம்!
கோடியின்பம் பெருகிவரும் மகோற்சவ கொடியேற்றம்!

## மாம்பழத் திருவிழா (2ம் நாள்)

மாங்கனி பெற்றுயர் உலகமே பெற்றோரென
மதிநிறை பிள்ளையாய் அருள்பெற்ற கணேசனும்
பாங்குடன் பூவற்கரை பதிதனில் மகோற்சவம்
பொற்பாய் காணுகின்ற போதினிலே! - இன்னாளில்
நீங்கிவரும் வினைகளெல்லாம் அவனாலே என்றுரைக்கும்
நல்லடியார் வணங்கியுனை வளம்பெறவே காத்தருளி
மாங்கனி நிவேதித்து சிறப்புகள் காண்போமே!
மகிழ்வோடு கனிபெற்று எழுந்தருளி வாராயோ!

**08.08.2008** **யாழ்.தினக்குரல்**

## மதுர திருவிழா (3ம்நாள்)

இனிமை தருகின்ற நாளாகி மகிமைபெற
இகமதிலே பொலிவுறும் மலர்ச்சோலை பதிதனிலே
நனிசிறந் துய்திடவே எமக்கெல்லாம் அபயமதை
நல்கிடும் சித்திதரு விநாயகனின் விழாக்கோலம்
பணிவோடு திருவடியில் பக்தியின்பம் தருகின்ற
பக்தர்களின் நலம்மேவி கருணை செய்பவனே!
துணிவோடு அவர்வாழ துணையாகி வருபவனே!
தொழுவோரை காத்திடவே இனிமைதனை ஏற்றிடையா!

09.08.2008 யாழ் தினக்குரல்

## பூந்தண்டிகை (4ம் நாள்)

சந்தண காப்புடனே அன்னா பிசேஷகமும்
சாற்றிடவே பூரிப்பாய் சாட்சிதரும் கணநாதனே!
சிந்தையிலே நிலைத்திடவே தினமுந்தன் பெயருரைத்து
சிறப்புகள் யாவையும் ஓங்கிடவே வைப்பவனே!
சொந்தமென உந்தனையே எண்ணியிங்கு வாழுகின்ற
சேயெமக்கு வந்தருள வேண்டு கின்றேனே!
நொந்துவரும் மனங்களெல்லாம் களிப்புறவே ஐங்கரனே!
பூந்தண்டிகை மீதிலேறி அருள்மழை பொழிவாயே!

10.08.2008 யாழ் தினக்குரல்

## திருவிளக்கு பூசை (5ம் நாள்)

திருவிளக்கு நிறைகுடங்கள் கற்பூரம் மஞ்சளுடன்
தித்திக்கும் கற்கண்டும் மோதகமும் ஆவலோடு
பருகிடவே பால்பழமும் மலர்தாங்கு மாதர்களும்
ஆடிவரும் திங்களின்று தீபங்களும் ஒளிர்ந்திடவே
வருமடியார் மனம்போல பலமான வாழ்வினிற்கு
வரமருளும் பூவற்கரை பதியிலமர் புண்ணியனே!
கருத்தோடு உனைப்பாட கரம்கூப்பும் பக்தர்கள்
கருவினிலே பொருளாகி ஒலித்திடவே வாருமையா!

**11.08.2008** யாழ்.தினக்குரல்

## மஞ்சத் திருவிழா (6ம் நாள்)

விக்கினங்கள் தீர்ப்பவனே! பூவற்கரை பதியினிலே
வரமனைத்தும் தருபவனே! விநாயகப் பெருமானே!
எக்கருமம் செய்வதிலும் முதலுன்னை வணங்குதலால்
ஏற்றவழி காட்டிவரும் ஏரம்பனே! ஓங்காரனே!
முக்கண் பெற்றிங்கு ஞானவடிவ பொருளே!
மூசூஷிக வாகனனாய் எமையாளும் சிவசுதனே!
பக்தரெல்லாம் உன்னழகு கோலமதை காண்பதற்கு
பரிவுடனே மஞ்சமேறி வருவாயப்பா! வாரணனே!

**12.08.2008** யாழ்.தினக்குரல்

## சப்பைரத திருவிழா (07ம் நாள்)

தொப்பை அப்பனே! வேழமுக வடிவினனாய்
துலங்கிடும் எம்குல தெய்வமே! அழகுபதியாம்
ஒப்பிலா மலர்ச்சோலை நிறைந்த பூவற்கரையின்
ஓங்குமுயர் மூலவனாய் அருளாட்சி செய்பவனே!
இப்புவியில் மாந்தரெலாம் மாளாது தவிக்கையிலே!
இடரகற்றி நலம்தரவே எலியின் மீதமர்ந்து
சப்பைரத பவனிவந்து கரமைந்தும் நீட்டியே
சேயெம்மை ஆதரிப்பாய் சகஜநிலை திரும்பிடவே!

13.08.2008

**யாழ்.தினக்குரல்**

## வேட்டைத் திருவிழா (08ம் நாள்)

பாடறிந்து வினைகளையும் வேட்டையாட
பூவற்கரை பாலகனும் ஓடிவாறான்
ஏடறிந்து பாடலோடு ஆடிவாறான்
ஏகநந்தன் குதிரைமீதே தேடிவாறான்
ஆடலோடு பாலர்களும் பாடிவர
அழகுநிறை மாவடியை நாடிவாறான்
சூலமோடு சட்டிகளும் பறையொலியும்
சூழ்ந்துவர வேட்டையாடி வாருமையா!

14.08.2008

**யாழ்.தினக்குரல்**

## தேர்த் திருவிழா (09ம் நாள்)

சிற்பங்கள் கதைபகரும் தேரேறி வதிரியிலே
சிங்காரமாய் பவனிவரும் பூவற்கரை பிள்ளையாரே!
கற்பக தருவாகி தொழுமடியார் வினையழிக்க
காவலனாய் விளங்கு மெங்கள் கணபதியே
நற்றவம் செய்தோமே நாளுமுன்னை காண்பதற்கே
நயமான (இ)ரதமமைத்தும் உந்தனுக்கு தந்தோமே
பொற்பதியின் மூலவனே தேரோடும் வீதியிலே!
பாங்குடனே அங்கமதால் அடியளிக்க அருள்வாயப்பா!

15.08.2008 யாழ்.தினக்குரல்

## தீர்த்தத் திருவிழா (10ம் நாள்)

மெய்யுருகி ஆடிவரும் அருமருந்துத் தீர்த்தமையா!
மேனியெங்கும் நனைகையிலே வினைபோக்கும் தீர்த்தமையா!
நெய்யுருகும் நிலையினிலே எங்கள் சுமைகளையா!
நேர்த்தியோடு வருபவர்கள் பருகிடும் தீர்த்தமையா!
உய்யவழி ஏதுமின்றி நாம்படும் வேதனைகளை
உன்னருள் தீர்த்தமதால் போக்கிடவே நாங்கள்
கைகூப்பி நின்றிங்கு அரோகரா என்றிடவே
கணபதியே தீர்த்தமாட எழுந்தருளி வாருமையா!

16.08.2008 யாழ்.தினக்குரல்

## புண்ணியனே வாருமையா!

நவின்றிடும் போதினிலே செவியுற்றோர் நல்வார்த்தை
நவின்றிட வேண்டுமையா! நல்லையம் பதியானே!
தவித்திடும் வேளைகளில் தாவிவந்து துன்பமதை
தவிர்த்திட வேண்டுமையா! நீதிநிறை சிவபாலனே!
செவிமீறி வருமொலிகள் நின்பால் விழவில்லையோ!
செவிகள் ஈராறும் செயலிழந்தும் போனதுவோ!
புவிதனில் வினைகளை அழித்திடவே (இ)ரதமேறி
புவிநாதன் பெற்றெடுத்த புண்ணியனே வாருமையா!

**28.08.2008** **தினக்குரல்.**

## நல்லூரின் சேயே!

வேரோடு இடரகல வேல்தந்து அருள்தரவே
ஊரோடு வந்துனையே இறைஞ்சியே! – நீரோடும்
தீர்த்தத்தால் பொலிவுடனே திகழ்ந்திடவே அருள்தா!
சீர்பதியாம் நல்லூரின் சேயே!

**29.08.2008** **தினக்குரல்.**

## தேடற்கரிய தேரன்றெரிய எங்குற்றாய்!

வேடனாய் விருத்தனாய் வேங்கை மரமுமாகி
வேடங்கள் பலதாங்கி வள்ளியை மணந்தவனே!
பாடமொன்று உரைத்துமே தந்தைக்கு குருவாகி
பரிவோடு குருபரனாகி பெயரோங்கி நிற்பவனே!
பாடல்கள் யாவிலுமே பொருளாகி திருமுருகாற்று
படைதனிலே வந்துறைந்து உலகறியவும் வைத்தவனே!
தேடற்கரிய தேரன்றெரிய எங்குற்றாய் சந்நிதியானே!
தேவைகளை உணர்ந்துநின்று தேரேறி வாருமையா!

**14.09.2008** **வீரகேசரி.**

## நல்லையிலே தலமழகு!

இராகம் :- ஆனந்தபைரவி — தாளம் :- ஆதி

நல்லையிலே தலமழகு நற்பெயரின் பொருளழகு!
தில்லையிலே கூத்தாடுமுன் தந்தையுமோ அழகழகு!
நல்லகடல் சூழுகின்ற நயினையிலே உன்தாயழகு!
சொல்லவரும் கவிதையிலே சந்தமென வருமுன்னழகு!

கூவியுன்னை அழைக்கின்ற குரலெதுவும் கேட்கவில்லையா!
தேவியரின் செவிகளிலும் தேடிவந்து விழவில்லையா!
மேவிவரும் அடியவரின் மனக்குறைகள் புரியவில்லையா!
தாவிவந்து தாங்கிடவும் தங்கவேலை அனுப்பவில்லையா!

தந்தைக்கு உபதேசம் தந்துநின்ற வேலவா!
வந்துதித்து பொய்கையால் விளங்குகின்ற சரவணா!
சிந்தையிலே நின்றருளும் சிங்காரனே! சிவபாலா!
வந்தவினை வேரறுக்கும் வண்ணமயில் வடிவழகா!

சங்கிலியன் வணங்கிய சிறப்புயர் தலமதிலே
சங்கத்தமிழ் நின்றுயர்ந்த சான்றுகள் மிளிருதப்பா!
அங்கமெலாம் உன்நீறணிய அகன்றிடுமே பிணிகளெலாம்!
இங்கெமது துயரமெலாம் இப்படியே ஆகிடுமோ!

சூரனோடு சமர்செய்து சங்காரம் செய்தவனே!
தீரமுடன் வெற்றிபெற்று தெய்வானையை மணந்தவனே!
பாரதனில் வழிதிறந்து பக்தர்களை காத்திடவே!
ஈரவிழி சொரிந்துன்னை இறைஞ்சுகின்றேன் நல்லையழகா!



கனா. எதிர்வீரசிங்கம்

## கீதைதனைச் சொல்வாயோ?

அங்கமெலாம் நாமம்பூசி வல்லிபுரம் வருவோரும்
அபயமென உன்நாமம் வாய்நிறைய சொல்வாரே!
அங்கொரு சபைதனிலே பாஞ்சாலி குரல்கேட்டு
ஆபத்தில் கரம்நீட்டி மானமும் காத்தவனே!
இங்கொரு நீதிவேண்டி நாமெல்லாம் தவிக்கின்றோம்!
இன்னுமுன் கண்களிலே தெரியவில்லையா மாயவனே!
வங்கக் கடல்தன்னில் தீர்த்தமாடி வருவாயே!
வந்திங்கு சாரதியாகி கீதைதனை உரைப்பாயே!

**14.10.2008** **தினக்குரல்.**

## கோண்டாவில் சிவகாமி அம்பாள் இராஜகோபுர தரிசனம்

இராகம் :- சங்கராபரணம் தாளம் :- ஆதி

**பல்லவி.**

கண்டேனொரு பேரொளியை தில்லையிலே – நின்று
கொண்டேனிரு கரங்கூப்பி அதன் எல்லையிலே!

- கண்டேனொரு ...

**அனுபல்லவி.**

கண்ணழகில் உணர்ந்துகொண்டேன் சிவகாமிஎன்று – என்
அன்னையின் வதனங் கண்டே மகிழ்ந்தேனன்று!

- கண்டேனொரு ...

**சரணம்.**

வண்ணமலர் தொடுத்துனக்கு அழகுமாலை அணிந்தேனே!
எண்ணமெலாம் உனையன்றி வேறில்லை பணிந்தேனே!
உன்னருளால் பிறவிக்கடல் நீந்திடவே துணிந்தேனே!
என்னுயிரை உன்னிடமே அடைக்கலமாய் தந்தேனே!

- கண்டேனொரு ...

ஆதியிலே வாழைவெட்டி மானம்பூத் திருவிழாவும்
வேதநெறி நின்றுனக்கு ஓர்மனதாய் செய்தோமே
கோதையுந்தன் கிருபையினால் கோபுரத்தை அமைத்து
குடமுழுக்கை கங்கைநதி நீர்கொண்டு தந்தோமே!

- கண்டேனொரு ...

இராகம் :- மாயாமாளவகௌளை தாளம் :- ஆதி

**பல்லவி.**

அன்னையுன் அன்பிற்கும் எல்லையுண்டோ! — எங்கும்
அன்பர்களின் தாயாக உறைந்திடும் இறைவியே!

- அன்னையுன் ...

**அனுபல்லவி.**

கண்ணெதிரே காட்சிதந்து நிற்பவளே சிவகாமி — எம்மை
கண்ணிமையாய் காப்பதுபோல சுற்றிவரும் சிவதேவி!

- அன்னையுன் ...

**சரணம்.**

அரசடிப் பதிதனிலே ஆனைமுகன் வீற்றிருக்க!
வரந்தர நல்லையிலே ஆறுமுகன் ஆட்சிசெய்ய!
கரமதிலே சங்குடனே நாராயணனும் அருகிருக்க!
பரம்பொருளே என்றுமுன்னை தன்னுடலில் வைத்திருக்க!

- அன்னையுன் ...

## உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!

இராகம் :- லதாங்கி　　　　　　　　தாளம் :- ஆதி

**தொகையறா**

அழகனே! நல்லூரில் அருளாட்சி புரிபவனே!
இளவலே! வலமிடமாய் இருமாதரோடு இருப்பவனே!
களமதிலே சூரபத்மனை சிரசொடித்து வதைத்தவனே!
அழகொளிரும் ஆலயத்தின் அலங்காரனே! ஆறுமுகனே!

**எடுப்பு**

அழகொளிரும் ஆலயத்தில் அமர்ந்தவனே! - நல்லை
வளம்பெருக அருளாயோ! குருபரனே!

- அழகொளிரும்...

**தொடுப்பு**

களங்கண்டு சூரனையும் வதைத்தவனே! - எங்கள்
உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!

- அழகொளிரும்...

**முடிப்பு**

ஆறுபடை வீடுனக்கு இருந்தென்ன! - நாங்கள்
ஆறவொரு வீடில்லை இங்கெமக்கு!
நீறணிந்து உந்தனையே தொழுதென்ன! - எங்கும்
நீறாகிப் போகுதையோ வாழ்வெமக்கு!

- அழகொளிரும்...

மயிலேறி வலம்வரும் போதினிலே! - தமிழ்
மாந்தர்களின் துயரங்கள் காணவில்லையா!
துயிலாது உன்நாமம் சொல்கையிலே! - பன்னிரு
செவிகளிலும் வந்துநிதம் விழவில்லையா!

- அழகொளிரும்...

அன்னையுன் நிலையுணர்ந்து வேல்தந்தாள் - தந்தை
ஆதிசிவனோ உன்னிடத்தில் கற்றுணர்ந்தான்!
மன்னுபுகழ் சங்கிலியன் ஆண்டமண்ணில்! - என்றும்
மாதிருவர் புடைசூழ மன்னவனாய்!

- அழகொளிரும்...

இறுவெட்டு பாடியவர் :- திருமதி ஜனனி செந்தூரன்.
விரிவுரையாளர்,
நுண்கலைக்கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## பஞ்சமுகன் பவனிவரும் தேரழகு

இராகம் :- ஆனந்தபைரவி தாளம் :- ஆதி

### பல்லவி

பஞ்சமுகன் பவனிவரும் தேரழகு! - என்றும்
பூவற்கரை பதிதனிற்கோ பேரழகு!

- பஞ்சமுகன்...

### அனுபல்லவி

தேரசையும் எழில்காணும் பெருங்கூட்டம் ! - வினை
வேரழித்தே போக்கிடுமே மனவாட்டம்!

- பஞ்சமுகன்...

### சரணம்

சிற்பங்கள் வரலாறு தனைச்சொல்ல - எங்கள்
சான்றோரின் இறைபணியும் உலகறியும்
கற்பக கணபதியும் தேரிலேறி - எங்கும்
உக்கிரவடிவாகி அழித்தலையே புரிந்திடவே

- பஞ்சமுகன்...

நாதஸ்வர மேளமுடன் மணிகளெல்லாம்
நாதங்களாய் தேரினையே சுற்றிவர
வீதியெங்கும் அடியவர்கள் பண்ணிசைக்க
வீரமுடன் அழித்தலையே புரிந்திடவே!

- பஞ்சமுகன்...

**09.06.2009**

## வித்தகனே எழுந்தருள்வாய் நேரினிலே!

இராகம் :- சாருமதி தாளம் :- ஆதி

### பல்லவி

சித்திர தேரிலேறி வருவாயப்பா - தினம்
சித்திகள் எமைச்சேர அருள்வாயப்பா!

- சித்திர...

### அனுபல்லவி

தத்துவ பொருளுரைக்கும் தேரினிலே - எங்கள்
வித்தகனே! எழுந்தருள்வாய் நேரினிலே!

- சித்திர...

### சரணங்கள்

அட்டதிக்கு யாவிலுமே பல்லாண்டை - மெய்
அடியவர்கள் வடமிழுக்க பாடிடவே!
கட்டழகு தேரசைந்து வருகையிலே! - செய்
கன்மவினை ஊரினிலே அழிந்திடவே!

- சித்திர...

அங்கமதால் தேரினடி அழித்துருளும் - பக்தர்
பங்கமில்லா வாழ்வினிற்காய் தொழுதிடுவார்!
பொங்கிவரும் பரவசத்தால் மெய்வருந்தி - எம்மை
பூவற்கரை பிள்ளைநீயும் காத்திடவே!

- சித்திர...

முத்தமிழும் துலங்குகின்ற வதிரியிலே! - என்றும்
மூத்தவனுன் ரதோற்சவமே பேறுதரும்!
சித்தமெலாம் பிரணவப் பொருள்விளங்க - சித்தி
விநாயகனே பஞ்சமுக வடிவினனாய்!

- சித்திர...

## தீவினைகள் அழித்திடும் நயினையாளே!

ஆயிரத்தெட்டு மணிகளுமே அலங்கரித்து அசைந்திடவே
அலைகடலும் நாற்றிசையில் ஆர்ப்பரித்து ஒலியெழுப்பிடவே
கோயிலுறை நயினா தீவெங்குமுன் நாமமொலித்திடவே
கரங்கூப்பி அடியவர்கள் பாமாலை புனைந்திடவே
தாயிவளாய் நாகபூசனியே! அரவமுடன் காட்சிதந்திடவே
தேரிலேறி வருவாயம்மா! தீவினைகள் அழித்திடவே!
நோயின்றி தாங்குமுனை வடம்பிடித்து தேரிழுத்திடவே
நாகரூபியே சஞ்சலங்கள் நீக்கியெமை காத்திடம்மா!

**06.07.2009** **சுடரொளி**

## அருளல் செய்குவாயே நாகபூசனியே!

ஐந்துதலை நாகமென்றும் குடையாகும் வித்தகியே!
அன்புடனே சிவலிங்கம் துணையாகும் பூரணியே!
விந்தைபல காட்டிநிற்கும் தீவகத்தின் பேரொளியே!
விருப்புடனே அரவங்கள் மலர்தூவிடும் மனோன்மணியே!
வந்துபல மன்னர்களும் வணங்கிய நாகபூசனியே!
வரம்வேண்டி வருமடியார் நிறைவுபெற செய்பவளே!
இந்துக்கடல் மீதினிலே எழில்பூத்த ஈஸ்வரியே!
இகங்குளிர தீர்த்தமாடி அருளல் செய்குவாயே!

07.07.2009 சுடரொளி

## வதிரி பூவற்கரையான் உற்சவ உன்னதங்கள்

### கொடியேற்றம்

சிந்தூரன் தனையழித்து நெற்றியில் திலகமிட்டு
சிங்கார மாகவென்றும் காட்சிதரும் கணபதியே!
எந்நாளும் அருள்தரவே பூவற்கரை தலமமர்ந்து
இடர்கள் களைகின்ற மாவயிற்றுப் பிள்ளையே!
பண்ணோடு பாமாலையும் நாதஸ்வர மேளமுடன்
பாங்காக மகோற்சவ கொடியேற்றம் காண்கையிலே
எந்நாளும் பொன்னாளாய் எல்லோரின் மனங்களிலும்
ஈடேறும் இந்நாளில் நீர்சொரியும் விழிகளிலே!

### மாம்பழத் திருவிழா

கலகமே நோக்கமென நாரதன் தாங்கிவந்த
கனியதுவை பெற்றிடவே தந்தையின் சொற்படி
உலகமே எதுவென்று மனதினிலே நன்குணர்ந்து
உலகத்தை பெற்றோரே என்றெமக்கு உணர்த்தியவனே!
நலமுடன் அன்றுமுதல் மாங்கனிகள் பலவைத்து
நிவேதனம் செய்துனக்கு தொழுகின்றார்! அடியவர்கள்
தலமதிலே இனிமையின் சுவைததும்பி இன்புறவே
திருமருவும் விழாதன்னை காண்போமே! இந்நாளிலே!

## மதுரத் திருவிழா

அண்ணமார் எனநின்று வழிபட்டு வந்தோமே
ஆனபல பெரியோர்கள் ஆசார சீலர்களாய்
திண்ணமாய் கற்றுணர்ந்து ஆன்மீக பற்றுதலால்
திருமிகு விநாயகா! உன்னையே பிரதிஸ்ட்டை
வண்ணமாய் செய்தனரே! சுவைபடும் வாழ்வெமக்கு
வந்தமைய அலங்கார விழாதன்னை மஹோற்சவமாய்
எண்ணித் துணிந்திங்கு மாற்றினோமே! ஐங்கரனே!
ஏற்றமுடன் மதுரத்திருவிழா காண்பாயே! கணபதியே!

## பூந்தண்டிகை

வாசமலர் சோலையாம் பூவற்கரையின் மலர்களாலே
விருப்புடனே அலங்காரம் செய்தழகு பார்ப்போமே
வீசிடும் தென்றலும் உணர்த்திடு முன்நாமம்
விளங்கிடும் பதிதனிலே வித்தகாவுன் அருளாட்சி
தேசுடனே நின்வதனம் காண்பதற்கே பூந்தண்டிகை
திருவிழா நன்நாளில் தோள்களிலே சுமந்துன்னை
ஆசிபெறவே வணங்குவோமே! அன்பர்களை ஆட்கொள்ள
அருளாசி தருவாயே! அங்குசனே அபயமுடன்

## திருவிளக்கு

ஏற்றிடும் கரங்களும் துதித்திடும் மனங்களும்
ஏரம்பா உனையன்றி வேறொன்றும் இல்லையப்பா!
போற்றுவோம் உன்பாதம்! புத்தியில் உறைபவனே!
பூவற்கரை பாலகனே! மனவிருள் அகற்றுபவனே!
காற்றினில் கலந்தவனே! ஒளியினில் வருபவனே!
காண்பவர் நெஞ்சமெலாம் குளிர்ந்திட வைப்பவனே!
சாற்றிடும் மலர்களும் நிறைகுடமும் விளக்குகளும்
சேர்ந்துமே வந்திட்வே வீதிவலம் வருவாயே!

## மஞ்சத் திருவிழா

தம்பிக்கு மணமுடித்து மகிழ்வாய் நின்றவனே!
தந்தத்தை ஒடித்திங்கே பாரதம் சமைத்தவனே!
தும்பிக்கை முகத்தோனே! ஐந்து கரத்தோனே!
தூயபதி பூவற்கரையின் மூத்த கொழுந்தே!
நம்பிக்கை வைத்துன்னை தொழுவோரை காப்பவனே!
நற்றமிழ் பாமாலை பண்ணோடு நாமிசைக்க
அம்பிகையின் புதல்வனே! அழகிய மஞ்சமேறி
அபயகரம் நீட்டிடவே வலம்வந்து அருள்வாயப்பா!

## சப்பைரத திருவிழா

பாடல்கள் பலகண்டாய்! பஜனைதனை வெள்ளிதோறும்
பாங்காய் பாலரெலாம் பாடிடவும் கேட்டிடுவாய்
ஆடலின் நாயகனாம் உன்னப்பன் அம்மைதனை
அறிவின் இருப்பிடமாய் தொழுதுமே நின்றவனே!
நாடாது உனையன்றி மனமெலாம் வேறில்லை
நற்பயன் தருமிந்த ஆலய வாசல்தனை
மூடாத உன்னருளால் பேரின்ப நிலைபெறவே
மகாகணேசா! சப்பைரத பவனிதனை காட்டுமையா!

## வேட்டைத் திருவிழா

பேரிடர் வருங்கால் தீர்த்துமே வைப்பவனே!
பேரின்ப நிலைகாண எமக்கருளும் ஐங்கரனே!
யாரிடம் போவதுன் தலைவாசல் தனையன்றி!
யாதுமே நீயாகி காவிரியோட வைத்தவா!
நேரிடும் வினையகல கையிலே வில்லம்பும்
நேர்த்தியாய் ஏந்தியிங்கே மாவடி - அண்ணமாரில்
போரிடும் பாங்கினனாய் வேட்டையாட - பக்தர்கள்
பாடறிந்து புரவிமீது ஏறிநீயும் வருவாயப்பா!

## தேர்த் திருவிழா

அங்கமெலாம் நொந்துபட்டு தேரினடி அழித்திடும்
அடியவர் கூட்டமுனை தொடர்ந்து வந்திடவே!
எங்குமுன் புகழ்பாடும் ஓதுவார் அடியவர்களும்
ஏற்றவாம் பண்ணிசையால் உன்புகழ் பாடிடவே!
சங்குடனே சல்லாரி நாதஸ்வர மேளமுடன்
சிங்காரமாய் ஆடிவரும் காவடிகரகமும் சுற்றிவர
பங்கமிலா வாழ்வுதனை வேண்டுமுன் பக்தருக்காய்
பொற்பான தேரேறி வந்திடவே வேண்டுகிறோம்!

## தீர்த்தத் திருவிழா

அருளல் செய்திடவே ஈசானத் தீர்த்தமாடி
அபயகரம் காட்டிடும் களிற்றின் மாமுகனே!
பெருவளம் நிறைந்திடும் பூவற்கரை பதிமேவும்
புண்ணியனே! தேவர்களை காத்தொருக்கால் நின்றவனே!
திருவுளங் கொண்டெமது அவலங்கள் நீங்கிடவே!
தொந்திக் கணபதியே கடைக்கண் பாராயோ!
வருமுந்தன் காட்சிகாண நிவேதனங்கள் செய்கின்றோம்!
வந்திங்கு நீராடி தோஷங்கள் களைவாயே!

**27.07.2009 – 05.08.2009** **தினக்குரல்**

## அச்சுவேலி காட்டுமலை கந்தனருள் போற்றி!

இராகம் :- மோஹனம் தாளம் :- ஆதி

**தொகையறா**

சான்றோரின் தலமாகி சீர்தெங்குடனே கமுகுகளும்
வானோங்கி சிறப்புயர்ந்த வளமிகு நாவலம்பதியினிலே
தேனோடு தினைமாவும் தந்துனையே தொழுவோர்க்கு
குன்றாத வரமருள குமரனடியே போற்றிபோற்றி!

**பல்லவி**

அதிசயங்கள் நிகழுதையா உன்னிடத்திலே – புண்ணிய
தீர்த்தத்தில் தீபங்கள் எரியுதையா உன்தலத்திலே!

- அதிசயங்கள்...

**அனுபல்லவி**

அருளாளர் சீனியரின் நெஞ்சமதிலே உறைந்தவனே!
பெருமானார் அவராலே திருக்கோயில் கொண்டவனே!

- அதிசங்கள்...

**சரணங்கள்**

கதிர்காமத் தலம்விடுத்தே வந்தமர்ந்த குருபரனே!
காட்டுமலைக் கந்தனென பெயரெடுத்து அருள்பவனே!
கதியென்று உன்னடிகள் பணிவோரை காப்பவனே!
கொடுநோய்கள் யாவையுமே மருந்தாகி தீர்ப்பவனே!

- அதிசயங்கள்...

உலகமெங்கும் பெயர்கூறும் நாவலம் பதிவாசா
உயர்வள்ளி தெய்வானை புடைசூழும் மணவாளா
கலகத்தில் மாங்கனிக்காய் மயிலேறி உலகளந்தவா
கடுங்கோபம் கொண்டுநீயும் ஆண்டியாகி நின்றவா!

- அதிசயங்கள்...

இராகம் :- ரேவதி தாளம் :- ஆதி

## பல்லவி

வேதனைகள் சொல்லுகிறோம் முருகையா - எங்கள்
வேண்டுதல்கள் தீர்த்தருள வாருமையா!
சோதனைகள் பலவழியில் வந்தாலும் - எங்கும்
சொல்லுமொரு மந்திரமும் நீதானையா!

- வேதனைகள்...

## அனுபல்லவி

சூரியநல் வேல்கொண்டு வினையகற்றி - கல்வியை
வாரியே வழங்கிடுவாய் பதிமேவி
ஆகமங்கள் மேலோங்கி கிரியைகளும் - செய்யும்
அருளாளர் சந்ததிகள் தினமுருகும்

- வேதனைகள்...

## சரணம்

நாவலம் பதிதனின் அருட்கனியே! - தொழும்
நல்லடியார் மனங்களிலே பெருநிதியே!
நீவலம் வருகையிலே அருள்பெருகும் - புகழ்ந்து
நாற்றிசையும் தேவார ஒலிமுழங்கும்

- வேதனைகள்...

இராகம் :- ஹம்சானந்தி                                  தாளம் :- ஆதி

### பல்லவி

ஸ்ரீசக்தி வடிவேலன் - செல்வம்
செழித்திட வரந்தரும் சிவபாலன்!

- ஸ்ரீசக்தி...

### அனுபல்லவி

நாவலம் பதிதனிலே கந்த சுவாமி
நாவினில் குடிகொள்ளும் ஆறுமுக சுவாமி!

- ஸ்ரீசக்தி...

### சரணங்கள்

வாசலிலே அழகொளிரும் கோபுரமே - நாடி
வருவோரை கரங்கூப்ப வைத்திடுமே!
சூரனையே வதம்செய்ய வேலவனானாய் - தந்தை
சிவனுக்கு உபதேசித்து குருவானாய்!

- ஸ்ரீசக்தி...

சித்திரத் தேரினிலே பவனிவரும் - எங்கள்
சிங்கார வேலவனின் எழில்கோடி
புத்தொழில் பெருகிடவே அருள்சேரும் - எங்கள்
புண்ணியனின் ஆலயமே வந்துசேரும்.

- ஸ்ரீசக்தி...

## இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ!

இராகம் :- திலங்கு　　　　　　　　　　தாளம் :- ஆதி

**பல்லவி**

சொல்லெடுத்து நானெழுதும் சுந்தரனே!- என்
பல்லவியே என்றுமுந்தன் புகழ்தானே!

- சொல்லெடுத்து...

**அனுபல்லவி**

கையினிலே அழகுவேல் காட்சிதரும்!- உன்னை
மெய்வருத்தி பாடினாலே கோடிபெறும்!

- சொல்லெடுத்து...

**சரணங்கள்**

ஆற்றுப்படையில் நக்கீரனின் பொருளானாய்! - தமிழ்
ஆய்ந்திடவே ஔவைக்கு கனியீந்தாய்
போற்றிவரும் எங்களையேன் மறந்தனையோ - இன்றும்
பேரவலங்கள் தொடர்ந்திடவும் வைத்தனையோ!

- சொல்லெடுத்து...

உறவெல்லாம் ஆங்காங்கே வாடுதையா! - எம்
உள்ளமெலாம் முடிவின்றி கலங்குதையா
அறமுறையும் நல்லையிலே நீயுமில்லையோ! - எம்மை
ஆதரிக்க வேறுவழி இனியுமில்லையோ!

- சொல்லெடுத்து...

தமிழழகன் என்றுமுனை சொல்வோமே - செந்
தமிழிங்கு அழிந்திடலும் முறையாமோ!
இனிவரும் பொழுதுகளும் விடியாதோ! - உன்
இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ!

- சொல்லெடுத்து...



கண. எதிர்வீரசிங்கம்

## புங்குடுதீவுப் பதிவாழும் பரமேஸ்வரியே!

இராகம் :- கீரவாணி தாளம் :- ஆதி

### பல்லவி

பூங்குடி பதிவாழும் பராபரியே! - எம்மை
தாங்கிட வேண்டுமம்மா பரமேஸ்வரியே!

- பூங்குடி...

### அனுபல்லவி

விரிசடை கோலமாய் பாம்பணி தேகமாய்
திரிபுர சுந்தரியே கன்னிகா பரமேஸ்வரியே!

- பூங்குடி...

### சரணங்கள்

வாசலிற் கோபுரமும் உன்புகழ் சொல்லுதம்மா
வயல்வெளி காற்றுமுன்னை போற்றியே பாடுதம்மா!
ஈசனில் சரிபாதி சக்தியான தெய்வமம்மா
வாசமலர் மார்பிலாட ஒளிதரும் வதனமம்மா!

- பூங்குடி...

அன்னையுன் ஆலயத்தில் ஆயிரம் புதுமைகளும்
சொன்னபடி நடந்தேறும் வாக்குகளும் தருபவளே!
பண்ணிசையால் போற்றியுனை துதித்திடும் அடியவர்களும்
எண்ணுவதை நிறைவேற்றி ஏற்றருள் புரிபவளே!

- பூங்குடி...

இராகம் :- ஆனந்தபைரவி தாளம் :- ஆதி

### பல்லவி

ஆடிமாத பூரத்திலே சமைஞ்சவளே! - நாங்கள்
தேடிவந்து அலங்கரிக்க மகிழ்பவளே!
கோடிமுறை கண்களிலே தெரிபவளே! - எங்கள்
தோஷமெலாம் நீங்கிடவே அருள்பவளே!

- ஆடிமாத...

### அனுபல்லவி

தஞ்சமென வருவோரை அணைப்பவளே! - தக்க
தருணத்திலே அபயமென நிற்பவளே!
வஞ்சனைகள் பகைமைகளை அழிப்பவளே! - பக்கம்
வந்திருந்தே நோய்பிணிகள் தீர்ப்பவளே!

- ஆடிமாத...

### சரணம்

முத்துதிர சிரிப்பவளே காளியம்மா! - பெரும்
சொத்தேயெம் அலங்காரி! வேப்பிலைக்காரி
பிட்டியம் பதிதனிலே அருள்மாரி! - வரும்
பக்தர்களின் மனங்களிலே உறையும்மாரியே!

- ஆடிமாத...





## தேவரையாளி நரசிம்ம கதிர்காம ஆலயம்
## திருவூஞ்சல்

### காப்பு

தெய்வநெறி கல்வியொடு தமிழ்ப்புலமை செழித்தோங்கு
மெய்யுரைக்கும் தேவரையாளி மென்பதியில்! - ஒய்யார!
நரசிம்ம கதிர்காம நாதன்திரு வூஞ்சல்பாட
கரமைந்துக் கணபதியே காப்பு!

### நூல்

வேதங்கள் நான்கெடுத்து நற்கால்கள் நாட்டி
வெற்றிதரு உபநிடத விட்டம் பூட்டி
ஓதுவுயர் சாத்திரமாம் வடங்கள் மாட்டி
ஓங்குசிவ காமப்பலகை மேல்தளமாய் செதுக்கி
நாதமுறும் மணிகள் மயமாகும் பீடமதில்
நல்லமயி லேறியருள் நல்கிடும் நாதனிவன்
மாதருடன் இருபுறம் மகிழ்ந்தி ருந்தே
மகிமைதர வேலழகா திருமுருகா ஆடீரூஞ்சல்!

சுந்தரர்கள் அகமகிழ்ந்து பூமாரி பெய்திட
சீர்நிறையும் சூரியனும் அலங்காரம் செய்திட
சந்திரனும் தண்ணொளியை சார்ந்தே தந்திட
சாந்தமுடன் வானகமும் பார்த்தே மகிழ்ந்திட
இந்திர லோகமென தேவரையாளி யுந்திகழ்ந்திட
இணையிலா ஜோதியுடன் அடியவர்கள் கூடிட
விந்தைமிகு விருட்சங்களும் விரும்பியே நிழல்தந்திட
வெற்றிதரு கதிர்காம முருகனே ஆடீஞ்சல்!

அந்தணர்கள் வேதவொலி முழக்கங்க ளோர்பால்
ஆடிவரும் காவடிகள் கரகங்கள் சூழ்ந்துவர
சந்தத்துடன் எழுந்துவரும் பண்ணிசையு மோர்பால்
சிங்கார ஒலியெழுப்பும் கோபுரமணி யுமோர்பால்
சிந்தையிலே உன்நாமம் சுமந்துவரு மடியவரும்
சிறப்பாக வழிநடாத்தும் இளைஞர்களும் புடைசூழ
சுந்தரமாய் வள்ளிதெய்வ யானையுடன் காட்சிதரும்
சுந்தரனே தேவரையாளி முருகனே ஆடீஞ்சல்.

ஆறுபடை வீடுடையோய் அன்பருக்கு அன்பனே
ஆனந்த நிலைகொண்ட ஆறுமுக சுவாமியே
நாறுமலர் மாலையணி மார்பினனே சரவணனே
நற்றமிழ் காத்திட வகையனைத்தும் கொண்டவனே
பேறுகொண்டே கார்த்திகை பெண்கள்கரம் தவழ்ந்தவனே
பரவசமாய் திருமுரு காற்றுப்படை நாயகனே
ஆறிரு தடந்தோழனே அம்பிகையின் கடையவனே
அழகுமயில் வாகனனே ஆனந்தமாய் ஆடீருஞ்சல்.

## வாழ்த்து

திருநிறை யுமந்தணர் தேவர்கள் வாழி
தேடிவரும் ஆவினங்கள் சிறந்தே வாழி
பெருமறை சிவாக மங்கள் வாழி
பேசவினிய திருமறை களென்றும் வாழி
கருமுகில் பெய்யுமந்த நன்மழை வாழி
கனிந்து வருமக்கள் வளங்கள் வாழி
திருமருவுந் தேவரை யாளியுமே வாழி
தேனமுதாம் நரசிம்ம முருகனும் வாழி

முன்னின்று தலமமைத்த முன்னோரும் வாழி
மகிழ்வுடனே நிலம்தந்த மேலானோரும் வாழி
எந்நாளும் தொண்டுகள் செய்பவரும் வாழி
ஏற்றமுற அழகுதலம் அமைத்தோரும் வாழி
பொன்னொடு பொருள்தந்த பெருமக்கள் வாழி
பாங்குடனே உபசரிப்பு செய்தோரும் வாழி
மன்னுபுகழ் தந்திடும் கல்லூரியும் வாழி
மகிமைசேர் தேவரையாளி பதியென்றும் வாழி!

## மங்களம்

அகத்தியரை பாடவைத்த அழகனுக்கு மங்களம்
அருணகிரியை புகழ்பாட வைத்தவனுக்கு மங்களம்
மோகம்கொண்டு வள்ளியை மணந்தவனுக்கு மங்களம்
மாறுபடு சூரனை வதைத்தவனுக்கு மங்களம்
தகமையுடன் தெய்வயானை பெற்றவனுக்கு மங்களம்
தாயவளின் வேல்பெற்ற மைந்தனுக்கு மங்களம்
முகமாறு பெற்றுநின்ற சரவணனிற்கு மங்களம்
மன்னவனாம் கதிர்காம முருகனுக்கு மங்களம்!

சுபம்.... சுபம்...... சுபம்.....

சீர்திகழும் செம்பவளம் தாங்குகின்ற கால்களாக
செந்நிற திகலொளியும் அழகுமணி விட்டமாக
சேர்கடல் மாமுத்துடனே மணிகளும் வடங்களாக
சார்ந்திடும் வளரொலிகள் மாணிக்கம் பீடமாக
ஊர்பெருக ஊஞ்சல் இசையரு ளோதிட
உனைநாடு மடியார்க்கு மருமெழிலா மாடம்
நேர்மை உறைந்திடுந் தேவரையாளிப் பதிமேவும்
நரசிம்ம கதிர்காம திருமுருகா ஆடீரூஞ்சல்!

செஞ்சுடர் ஒளிவீசும் வேலென்றும் கரங்களாட
செவ்வேள் நாமமென்றும் சிங்காரமாய் எம்மிலாட
அஞ்சுதல் தவிர்த்திடும் வேலும் மயிலுமாட
அசுரகுலம் அழித்து நின்றபெரு வீரமாட
வஞ்சனை போக்கிடும் வெற்றிவேல் ஆடஆட
வானவர் குலங்காத்த குமரனே நீயுமாட
விஞ்சிடும் புகழோங்க சூரனை வதைத்தவனே
வண்ண மயில் வாகனனே ஆடீரூஞ்சல்!

ஆதியிலே வந்தமர்ந்த நரசிம்மர் காவலாக
அவனுறையும் பதியினிலே முன்னோர்கள் ஆசியாக
ஓதுமுயர் அடியவர்கள் திருப்பணியை முன்னெடுக்க
ஒண்பொருளே நீயென்று மிங்கமர்ந்தாய் அருள்
போதுமென்றே உரைக்கின்ற நல்மனம் காட்டியிங்கு
பொய்யுடல் வாழ்விற்கு மெஞ்ஞானம் எதுவென்று
வாதிட்டு சொன்னவனே! வள்ளியின் மணாளனே!
விருப்புடனே கதிர்காம கந்தனே ஆடீருஞ்சல்!

தந்தைக்கு உபதேசம் செய்துநின்ற பிள்ளையே
தக்கதொரு தருணமதில் உலகளந்து நின்றவனே!
சிந்தையிலே அருணகிரி உனைப்பாட உணர்ந்தவனே!
சீர்பெருகு தேவரையாளி யம்பதியின் மூலவனே!
நொந்துவரு மடியார்கள் குறைபோக்கி அருள்செய்து
நோன்பிருக்க ஷஷ்டியிலே போர்செய்து வென்றவனே!
கந்தமலர் பாதமதை தொழுகின்றோம் கண்டிங்கு
கையழகு வேலுடனே குமாரவேளே ஆடீரூஞ்சல்

வள்ளி தெய்வயானை யுடனமர்ந்த வேலவனே
வளம்நிறையு மிப்பதியின் உருத்தான காவலனே
அள்ளிடவே குறையாத கல்விதரும் கூடமதை
அன்பொழுக பார்ப்பவனே ஆறுமுகத் தையனே
துள்ளிவரும் பாலரெல்லாம் தூயமலர் தானெடுத்து
தூயவனுன் பாதமதை தஞ்சமென தொழுதிடவே
அள்ளிவீசி யருள்பவனே ஆதிசிவன் மைந்தனே
ஆனந்தம் பொங்கிடவே அருள் குமரா ஆடீஞ்சல்!

பன்னிரு கரங்களாலே அபயமளித் திடுமையனே
பண்ணிசை யாலிங்கு பரவசமாகு மெய்யனே
உன்னழகு கோலமதில் உய்யவழி தருபவனே
ஊர் சிறக்க அனுக்கிரகம் தந்திடும் வள்ளலே
எண்ணிலா இன்னல்கள் சூழ்கின்ற போதினிலே
ஏற்றெமையே காத்திடுவாய் கதிர்காம கந்தவேளே
புண்ணியனே புகழோங்கும் தேவரையாளி பாலகனே
பொற்பாக வந்தமர்ந்தே போதரவாய் ஆடீஞ்சல்!

## நல்லைநகர் பதியாளும் நாயகனே!

### விருத்தம்

நீதிநெறி நிலைத்திலங்கும் நல்லைநகர் பதிதனிலே
வேதநெறி தளைத்தோங்கி விளங்குமுயர் ஆலயமாம்
ஓதிவரும் நெஞ்சங்களில் ஓம்முருகா எனுந்நாமம்
மேதினியை காத்தருளும் மேன்மைகொள் ஔடதமே!

### பல்லவி

நீயின்றி எமக்கேது வாழ்வையா! - உன்
நினைவின்றி வேறொன்றும் இல்லையையா!

- நீயின்றி...

### அனுபல்லவி

நல்லைநகர் பதியாளும் நாயனனே! - எங்கள்
நோய்பிணிகள் நீக்குகின்ற ஔடதமே!

- நீயின்றி...

### சரணங்கள்

வேடனாய் விருத்தனாய் வேடமிட்டே - குற
வள்ளிக்குத் துணைவனாய் ஆகிநின்றாய்!
சீடனாய் தந்தையை ஆக்கிவைத்தே - குரு
பரனென்ற பெயர்கொண்டு விளங்கிநின்றாய்!

- நீயின்றி...

பழமொன்றில் ஔவையை வெற்றிகொண்டாய்! - மாம்
பழமொன்றால் ஆண்டியாய் வடிவெடுத்தாய்!
களமொன்றில் சூரனை வதைத்தவனே! - அந்த
இளமைலாள் தெய்வியை மணந்தவனே!

- நீயின்றி...

ஆடலிறை பெற்றெடுத்த ஆறுமுகனே! - எம்மை
அரவணைக்க மயிலேறி வந்திடுவாய்!
வீடாறு படைகொண்ட வேலவனே! - நாங்கள்
ஈடேற வழிகாட்டி நின்றிடுவாய்!

- நீயின்றி...

**இதழ் – 19/2011** **நல்லைக்குமரன் மலர்**

## பன்னாலை வைரவரின் பொற்பதியே!

இராகம் :- ஹரிகாம்போதி                தாளம் :- ஆதி

**தொகையறா**

பொன்விளையும் கல்வியொடு புகழோங்கும் பொற்பதியாம்
பன்னாலைய ஆலயமாய் போற்றுமுயர் வைரவரே!
எண்ணமெலாம் உனதாக்கி என்னாளும் தொண்டுசெய்த
சின்னாச்சி தூயவளால் சிறப்புயர்ந்த திருத்தலமே!

**பல்லவி**

நாடியுனை வருவோர்க்கு நலமளிப்பவனே! - உன்னை
கோடிமுறை பாடிடவேசொல் நயமளிப்பவனே!

- நாடியுன்னை...

**அனுபல்லவி**

கூடிவரும் அடியவரின் புகலிடமாய் - நாளும்
குன்றாது அருள்தருவாய் மகிழ்விடமாய்!

- நாடியுனை...

## சரணங்கள்

என்நாளும் சூலமுடன் எழுந்தருளி - உயர்
பன்னாலை மிளிர்ந்திடவே வந்தருள்நீ
கண்ணோடு நாம்காணும் வைரவரே! - துயர்
மண்ணாகி சென்றிடவே செய்பவனே!

- நாடியுனை...

அம்மணமாய் காட்சிதரும் போதினிலே! - எந்தன்
வெம்புகின்ற மனமிங்கு குளிருதையா!
செம்மணிச் செல்வனே! உன்னழகினிலே - பந்தம்
செம்மையாய் எனக்குள்ளே தோன்றுதையா!

- நாடியுனை...

இராகம் :- மலஹரி தாளம் :- ஆதி

### பல்லவி

எல்லாமே எனக்குள்ளே இருந்தாலும்! - உந்தன்
அருளன்றி அவையாயும் சிறப்பாகுமா!

- எல்லாமே...

### அனுபல்லவி

வெல்லுகின்ற செயல்களெல்லாம் உன்னாலே - ஞாலம்
சொல்லுமொரு காவலனாய் வைரவரே!

- எல்லாமே...

### சரணங்கள்

திருக்கோயில் அழகுறும் பன்னாலை!- நாளும்
உருக்கமுடன் வருமடியார்களோ அலைஅலை
கருத்தோடு திரிசூலம் கரமேந்தி! - சூழும்
காவலனாய் வணங்குகிறோம்! சிரம்தாழ்த்தி!

- எல்லாமே...

உக்கிரமாய் எழுந்தருளி வருகையிலே! - எங்கள்
ஊழ்வினைகள் பறந்திடுமே நொடிதனிலே!
அக்கிரமோ நிகழாது காப்பவனே! - எமக்கு
தக்கநிலை தந்திடுவாய்! வைரவரே!

- எல்லாமே...

**ஞானவைரவநாதம்**

**இறுவெட்டு பாடியவர் – தவநாதன் றொபேட்**

சிரேஷ்ட விரிவுரையாளர் (நுண்கலைக்கழகம்,
யாழ் பல்கலைக்கழகம்)

## அராலி ஆவரம்பிட்டி பதியாளே!

**இராகம் :- சக்கரவாகம்** தாளம் :- ஆதி

**தொகையறா**

ஆதிவழி அடியவரின் மனதுதித்து வந்ததாயே!
ஆகமங்கள் துலங்குமுயர் அராலிப் பதியாளே!
நீதிநெறி விளங்கிவரும் ஆவரம் பிட்டிதனிலே
நீண்ட வரலாறு கொண்டமுத்து மாரியம்மா!
பாதிமதி அணிசடையானின் பாகமாய் இருப்பவளே!
பாரிலுயர் வெற்றிதரும் மாதாமனோன் மணிநீயே!
நாதியற்று வருமடியார் புகலிடமாய் திகழ்பவளே!
நயமாக நாம்பாடித் துதித்திடவே வரமருள்பவளே!

**பல்லவி**

தீராத வினைதீர்க்கும் தேவியம்மா! - எம்மை
கூரான விழிகொண்டே பாருமம்மா!

- தீராத...

**அனுபல்லவி**

அடியவரின் மனதுதித்தே அமர்ந்தவளே! - அருள்
வடிவுடைய அம்பிகையாய் காட்சிதருபவளே!

- தீராத...

**சரணங்கள்**

தாயேயுன் செயலன்றி எதுவும் இல்லையம்மா!
நோய்பிணிகள் தீர்க்கவரும் ஔடதமும் நீதானம்மா!
ஆயகலைகள் அனைத்தையுமே உணர்விக்கும் எங்களம்மை!
தூயவழி காட்டிநிற்கும் என்றுமுன் பேரன்பை!

- தீராத...

அருவுருவத் திருமேனி கொண்டுருவம் நீக்கியிங்கே
திருமருவும் பீடமதிலே எழுந்தருளி ஆள்பவளே!
கருணைமனம் கொண்டவளே! நாவல்மர நாயகியே!
பொருளுணர்ந்தே கருங்கல்லால் ஆலயமும் அமைத்தோமே!

- தீராத...

**இறுவெட்டு பாடியவர் – எஸ்.ஜெகனி**

இராகம் :- ஸிம்ஹேந்ரமத்யமம் தாளம் :- ஆதி

### பல்லவி

குளிர்ந்தருள்வாய் அம்மா குளிர்ந்தருள்வாய்!
எழுந்தருளி வந்தெமக்கு குளிர்ந்தருள்வாய்!

- குளிர...

### அனுபல்லவி

மும்மாரி பொழிந்திங்கு ஊர்செழிக்க
எம்பிரான் சமேதராய் வந்தருள்வாய்!

- குளிர்...

### சரணம்

கொடுவினைகள் பறந்தோடி குலம்விளங்க
கோரநிலை மாறியிங்கே வளம்செழிக்க
சூலமொடு சிங்கவாகன மீதிலேறி
துயரங்கள் போக்கிடுவாய் வலம்வந்தே!

- குளிர்...

கமுகமரத்தில் கொடியேற்றி உற்சவத்தை
கரிசனையாய் பக்தியோங்க செய்வோமே!
அமுதவல்லியே அடியவர்கள் குறைகேட்டு
அதிசயங்கள் நிகழ்த்திடவே ஓடிவந்தே!

- குளிர்...

இறுவெட்டு பாடியவர் – த.தமிழினி

விரிவுரையாளர் ( நுண்கலைக்கழகம்)
யாழ்பல்கலைக்கழகம்.

இராகம் :- கமாஸ் தாளம் :- ஆதி

**பல்லவி**

காரணம் நானறியேன் அம்மா! - உந்தன்
கனிந்த நல்லருளை எனக்கு தராதிருக்கும்

-காரணம்...

**அனுபல்லவி**

ஆறாது அழுகின்றேன் ஓயாது நினைக்கின்றேன்
மாறாது அன்புகொண்டு உனைநான் தொழுதாலுமே

- காரணம்...

**சரணம்**

கையினிலே திரிசூலமேந்தி கண்டுமனம் நிறைகின்றேன்
மெய்யுடல் வருத்தியுந்தன் ஆலயத்தை சூழுகின்றேன்
செய்வது அறியாமலே நீர்குமுழி வாழ்வுதனில்
உய்யவழி தேடிநானும் உன்னடிகள் பற்றினாலும்!

-காரணம்...

ஆவரம் பிட்டிதனில் அதிசயத் தெய்வமம்மா!
நாவல்மர நிழல்தனிலே தோன்றிய மாரியம்மா!
பாவாலே உன்பெயரை சொல்லாத நாளுமில்லை
கூவியுனை அழைத்தாலும் குளிர்த்திகள் செய்தாலுமே!

-காரணம்...

**இறுவெட்டு பாடியவர் – அ.சுகன்ஜா**

விரிவுரையாளர், (நுண்கலைக்கழகம்)
யாழ்பல்கலைக்கழகம்.

## வேழமுகன் தம்பியே வேல்முருகா!

இராகம் :- ரீதிகௌளை    தாளம் :- ஆதி

### பல்லவி

நாளுமுன்னை நினைந்துருகி துதிக்கின்றேன்!- நல்லை
ஆளுமுன்னை நம்பியிங்கே வாழுகின்றேன்!

- நாளுமுன்னை...

### அனுபல்லவி

வேழமுகன் தம்பியே வேல்முருகா! - வேடனாய்
விருத்தனாய் வேடமிட்டே நின்றவா!

- நாளுமுன்னை...

### சரணங்கள்

அநீதிகள் கண்டதனால் போர்தொடுத்தே! - அன்று
நீதியை நிலைநாட்டியே வென்றவா!
மனுநீதி பிழைத்திங்கே வாழுமெமக்கே - இன்று
மனமிரங்கி உதவிடவும் வாராயோ!

- நாளுமுன்னை...

தந்தைக்கு உபதேசம் செய்தவனே! – உம்
சிந்தையிலே எம்நிலையும் புரியவில்லையா!
விந்தையையா! உனக்குள்ள பன்னிருவிழிகளும்! – எம்
விடயத்தில் ஒளியிழந்து நின்றதில்லையையா!

- நாளுமுன்னை...

இதழ் 20/2012    நல்லைக்குமரன் மலர்

## வதிரி பூவற்கரை பிள்ளையார்

இராகம் :- கானடா　　　　　　　　　　　　　　　　　　　தாளம் :- ஆதி

பஜனைப்பாடல்

ஆதியிலே அண்ணமாரை வணங்கி நிற்கவே! — எங்கள்
அறியாமை நீங்கியருள அமர்ந்த தெய்வமே!
தேவர்குலம் காத்துநின்ற காவல் தெய்வமே! — எங்கள்
பூவற்கரை பதிவிளங்க வந்த செல்வமே!

நாரணன் மருகன் தொப்பை அப்பனே! — அன்று
பாரதத்தை தந்தத்தினால் எழுதி நின்றவனே!
வாரணனே செயல்களில் ஜெய கணேசனே! - இங்கு
வதிரிவாழ் அடியவர்கள் தொழும் நேசனே!

தம்பிக்கு திருமணத்தை நடத்தி வைத்தவன்! — வெல்லும்
தும்பிக்கை கொண்டுதினம் ஆட்சி செய்பவன்!
நம்பிக்கை கொண்டோரை ஏற்று அருள்பவன்! - கல்லும்
நெகிழ்ந்திடவே அனுக்கிரகம் தந்து பார்ப்பவன்!

நாமங்கள் பலசொல்லி அழைக்க வருபவன்! — துன்பம்
நேருங்கால் ஓடிவந்து கரங்கள் தருபவன்!
ஐந்து கர ஆனைமுக அழகனவன்! — என்றும்
விந்தைமிகு பிள்ளையாக வந்து வாய்த்தவன்!

சிவனுமையின் மடிதனிலே தவழ்ந்த குணநிதி! — சேரும்
பவவினைகள் தீர்ப்பதிலே வல்ல கணபதி!
சித்திகளை தந்தருளும் சித்தி விநாயகன்! - ஊரும்
செழித்திடவே பவனிவரும் சக்தி கணபதி!

ஆலரசு நிழல்தனிலே அமர்ந்த பிள்ளையாரே!
கோலமுகம் காணவேண்டி கும்பிடும் அடியவர்கள்
சீலமுடன் வாழ்ந்திடவே சார்ந்துநித மருள்பவனே!
ஞாலமுணர்ந்த பூவற்கரை ஞானக்கண்ணனே! கணநாதனே!

## ஆசிதந்து அருளும் ஆலடியான்!

இராகம் :-மோஹனம் தாளம் :- ஆதி

### தொகையறா

மூலவனே அல்வையம்பதி மூசுஷிக வாகனனே!
மாலவனின் மருகோனே! மதிநிறை கணபதியே!
சீலமுறும் கல்வினதனில் சித்திபெற வைப்பவனே!
ஆலடியின் ஐங்கரனே ஆசிதந்தே அருள்வாயே!

### பல்லவி

ஆதிவழி வந்துதித்த ஐங்கரனே ! - உன்
பாதமலர் தொழுகின்றோம் ! அன்புடனே!

ஆதிவழி.....

### அனுபல்லவி

வேதநெறி மிளிர்கின்ற ஆலடியில் ! - ராஜ
கோபுரமும் அலங்கரிக்கும் உயர்வினில்!

ஆதிவழி.....

### சரணங்கள்

ஞானக்கண் கொண்டருள் செய்பவனே! எமக்கு
ஞாயத்தை உணர்த்திய நாயகனே!
ஆனைமுகனே அல்வையின் அருட்கடலே! - நாளும்
வினைகளை போக்கிடும் மூலவனே!

ஆதிவழி....

கோபுர மணியோசை கேட்கையிலே - ராஜ
கோபுர எழில்தனிலே திளைப்பவனே!
மூர்த்தி தலத்தீர்த்தச் சிறப்புகளால் - என்றும்
கீர்த்திகளை தருகின்ற சித்திகணேசனே!

ஆதிவழி...



கண. எதிர்வீரசிங்கம்

இராகம் :- பந்துவராளி தாளம் :- ஆதி

### பல்லவி

கைவிட மாட்டான் எங்கள் கணேசன் - தம்மை
மெய்வருத்தி வணங்குகின்ற அடியவரை என்றும்
- கைவிட மாட்டான்...

### அனுபல்லவி

பஞ்சமுக விநாயகனாய் காட்சிதரும் போதினிலே!
அஞ்சுதலை தீர்த்தெமது தீவினைகள் போக்கியென்றும்
- கைவிட மாட்டான்...

### சரணங்கள்

நெஞ்சினிலே சுமைகளெல்லாம் நிரலாக வந்தாலென்ன
நேருகின்ற துன்பமெல்லாம் நாடியே நின்றாலென்ன
கெஞ்சிதினம் வாழுகின்ற அவலங்கள் சூழ்ந்தாலென்ன
தஞ்சமென்றும் தருபவனே ஆலடியின் நாயகனாய்!
- கைவிட மாட்டான்...

நித்தமுந்தன் வாசலிலே நிம்மதியாய் தொழுகின்றோம்!
நீள்நிலத்தில் வாழ்ந்திடவே நின்தயவை நாடுகின்றோம்!
வித்திடும் செயல்களெல்லாம் வெற்றியுடன் திகழ்ந்திடவே!
வித்தகனே சாமணந் தறைப்பதியின் விநாயகனாய்!
- கைவிட மாட்டான்...

இராகம் :- சுத்த தன்யாசி                    தாளம் :- ஆதி

### பல்லவி

காரணனே வழி கூறுமையா! — என்றும்
பூரணமாய் உனைநான் மறவாதிருக்க!

- காரணனே...

### அனுபல்லவி

நேரினிலே தினமுன்னை காண்கையிலே! — எந்தன்
மீதினிலே கடைக்கண் பார்த்திடையா!

- காரணனே...

### சரணங்கள்

ஆதியிலே யோகர் சுவாமிகளும் - வந்தே
அருள்பெற்ற திருத்தலம் நின்தலமே!
நாதியற்ற நாங்களுமே நின்னருளை — பெற்றே
நலமுடனே பக்தியிலே திழைத்திடவே!

- காரணனே...

மூர்த்திதல தீர்த்தமுடன் ஆகமங்கள் - முறையே
மிளிருகின்ற ஆலடியின் மூலவனே!
கீர்த்திகளும் பெருகிவர வாழ்வினிலே — நிறைவே
காணும்நிலை இங்கெமக்கு வந்திடவே!

- காரணனே...

## கோப்பாய் பரமேஸ்வரி அம்பாள்

இராகம் :- மத்தியமாவதி　　　　தாளம் :- ஆதி

**எடுப்பு**

ஆதியிலே வந்துதித்தாய் பேச்சியம்மா! - இன்று
வேதியர்கள் சூழ்ந்திருக்கும் பரமேஸ்வரியம்மா!

- ஆதியிலே...

**தொடுப்பு**

நீதிநெறி ஓங்கிவரும் கோப்பாயிலே! — என்றும்
தீதறியா அத்திதோட்ட பதிதனிலே!

- ஆதியிலே...

**முடிப்பு**

மணியோசை நள்ளிரவு ஒலிக்கையிலே! — தாளம்
அணிசெய்தே விருட்சங்கள் ஆடுமம்மா!
வேலன்மகன் கந்தனாலே அமைந்தவளே! — உயர்
வேதநெறி தழைத்திடவே அருள்பவளே!

- ஆதியிலே...

நாமங்கள் பலசொல்லி அழைக்கையிலே! — எங்கள்
நெஞ்சினிலே நீயிருக்க வேண்டுமம்மா!
சேய்களெங்கள் அழுகுரலும் கேட்கவில்லையோ! — அதை
செவிமடுக்க மனமின்னும் இரங்கவில்லையோ!

- ஆதியிலே...

பரமனுக்கு அருகிருக்கும் பரமேஸ்வரி! — உன்
கரமிரண்டால் எமையணைத்து காத்திடம்மா!
வரமொன்று கேட்கின்றோம்! வந்திடம்மா! — மன
வன்மமெல்லாம் நீக்கிடவே பாருமம்மா!

- ஆதியிலே...

அலங்காரம் அபிசேகம் செய்கின்றோம்! — கும்ப
அபிஷேகம் காணுமெங்கள் பரமேஸ்வரியே!
நலன்மேவும் பக்தர்களின் துணைநீயே! — அம்மா
பலகோடி நன்மைகளும் தருவாயே!

- ஆதியிலே...

## ஔவையின் தமிழ்மேவ அருள்பவனே!

**இராகம் :- மோகனம்** **தாளம் :- ஆதி**

**எடுப்பு**

அழைத்தவர் குரல்கேட்டு வருபவனே! — முருகா
ஆவலுடன் எம்மை அணைப்பவனே!

- அழைத்தவர்...

**தொடுப்பு**

இருமாதர் புடைசூழ மகிழ்பவனே! — அன்று
ஈனர்கள் மமதைதனை அழித்தவனே!

- அழைத்தவர்...

**முடிப்பு**

உலகளந்த மன்னவனே மால்மருகா! — எங்கள்
ஊழ்வினை யாவையும் அறுப்பவனே!
எழில்வேல் கரமேந்தி காட்சிதந்து — நல்லையை
ஏடிலங்க செய்துபுகழ் தருபவனே!

- அழைத்தவர்...

ஐயப்ப சுவாமியென்று ஆனவனே! — எங்கும்
ஒய்யார வள்ளிலோல நாயகனே!
ஓமென்னும் பிரணவத்தின் உட்பொருளே! — நாளும்
ஔவையின் தமிழ்மேவ அருள்பவனே!

- அழைத்தவர்...

## பூவற்கரையான் தேரழகைக் காணவாரீர்!

இராகம் :- ஹம்சத்தவனி தாளம் :- ஆதி

### பல்லவி

தேரழகை காணவிங்கே வாருங்கள் - அதன்
பேரழகை கூடியிங்கே பாருங்கள்!

- தேரழகை...

### அனுபல்லவி

ஊர்கூடி திருப்பணியில் அமைந்ததேர் - பல
பேர்கூடி வடம்பிடிக்க வருகுதுபார்!

- தேரழகை...

### சரணங்கள்

பஞ்சமுக விநாயகனாய் எழுந்தருளி — எமக்கு
தஞ்சமென அபயந்தரும் திருக்காட்சி!
பஞ்சகரம் கொண்டிங்கு வினையழித்து — எழில்
பச்சைசாத்தி சாந்தநிலை தோற்றிநிற்கும்!

- தேரழகை...

அங்கமதால் தேரடியை அழிப்பதற்கு — பக்தர்
அலையெனவே உருண்டுவரும் எழில்பார்க்க
பொங்கிவரும் வெள்ளமென இசைமுழங்க — பஜனை
பாடிடவே சித்திரத்தேர் அசையுதுபார்!

- தேரழகை...

காவடி கரகமுடன் கற்பூரச் சட்டிகளும்
பூவற்கரை வீதியெங்கும் நிறைந்தழகு தந்திடவே!
நாவினில் அவன்நாமம் அரோகராவுடன் சேர்ந்தொலிக்க
நயந்தரு பல்லாண்டிசைக்க அழகுரதம் ஓடுதுபார்!

- தேரழகை...

2013.07.21

## எழில்ரதம் ஏத்தும் வெண்பா

இராகம் :- ஹிந்தோளம் தாளம் :- ஆதி

முக்கனியும் பாகுடனே முத்தமிழும் தருகின்றோம்!
முக்கண்ணனே! பூவற்கரை முழுமுதலே! — அக்கனியை
பெற்றதால் உலகமே பெற்றோரென உணர்த்தியே
பொற்பதி அமர்ந்தவனே! போற்று!

ஆடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்!
தேடுவோம் அவனருளை தினமிங்கே! — நாடியே
வித்தகனாம் பூவற்கரை விநாயகன் இன்றுவரும்
சித்திர தேருலாவே! சிறப்பு!

நறுமணச் சோலையாம் நற்பதி பூவற்கரையில்
அறுமுகனின் அண்ணலே! ஐங்கரனே! — உறுதுணையாய்
என்றுமெம் அருகிருப்போய்! எழில்ரதம் மீதிலேறி
அன்பொழுக வருவதே! அழகு!

அடியவர் புடைசூழ! அந்தணர் வேதமோத!
வடிவுறும் தேரேறி வருபவனே! — அடிதொழ
வேண்டுவோமிந் நாள்தனில்! வாரணனே அருள்தந்து
ஆண்டிடுவாய் ஐங்கரத்தோய்! அறிந்து!

சிற்பங்கள் மிளிர்ந்திடும் சிங்காரத் தேரேறியிங்கு
பொற்பதனே வந்திடுவாய்! பொன்நாளில் அற்புதமே!
ஐயாவுன் பஞ்சமுகம் அன்பர்தம் மனங்குளிர
மெய்பக்தி தந்திடுமே! மேன்மை!

வடம்பிடிக்க வருமடியார் வேண்டுதலை நிறைவேற்றி
திடமிதுவே! என்றுணர்த்தும் தருணமிதே! — உடனழைக்க
வருபவனே! பூவற்கரை விநாயகனே! தேரேறியின்று
தருவாயப்பா! தெய்வீகத் திறன்!

**2013.07.21**

## கனிபெற்ற காட்சி கண்டோம் பூவற்கரையில்

இராகம் :- கல்யாணி　　　　　　　　　　தாளம் :- ஆதி

**தொகையறா**

பூவற்கரை பதியினிலே புதுமைதரும் காட்சியாக
பொலிவுற்றே பக்தர்களை கவர்ந்திடும் திருக்கைலாயமே!
நாவலரும் பாவலரும் உயர்கல்வி மான்களும்
நயமுறவே வடித்திட்ட மாங்கனியின் கதையிதுவாம்
தேவர்களும் போற்றுகின்ற கணபதியும் முருகனுடன்
தத்துவங்கள் உரைத்திடவே சிவனோடு பார்வதியும்
ஆவலுடன் நாரதனை வரவேற்க மாமுனியும்
ஆங்கொரு கனிகொடுத்து ஆரம்பித்தான் தன்பணியை!

**பல்லவி**

பூவற்கரை பதிதனிலே திருக்காட்சி!
தேவர்கள் மலர்தூவும் கைலாயக்காட்சி!
சிவனுமை பிள்ளையாரும் முருகனுடன்
சேர்திருந்தே மகிழும் ஆனந்தக்காட்சி!

**அனுபல்லவி**

அருவிகள் நீர்வீழ்த்தி ஆர்ப்பரிக்கும்
ஆவினங்கள் பால்சுரந்தே நற்சுவைதரும்
புள்ளினங்கள் சிறகடித்தே தென்றல்வீசும்
பசுமையும் சாமரங்கள் வீசிநிற்கும்!

(கோரஸ்)

கைலாயக் காட்சிதனைப் பாருங்கள்! — எங்கள்
கணபதியின் மகிமைதனைப் பாடுங்கள்!

- கைலாயக்காட்சி

சிவனுடன் உமையவளும் வீற்றிருந்து
சிந்தனையில் உலகமதை எண்ணிமகிழ
தவப்பயன் பெற்றதனால் பிள்ளையாரும்
தம்பியாம் முருகனை அரவணைத்திடும்

- கைலாயக்காட்சி

திருலோக சஞ்சாரியாம் நாரதனும்
தீர்க்க தரிசனம் கொண்டவனாம்!
திருக்கைலாய மலைதேடி வந்துற்றான்
திருக்கரத்தில் கனியொன்று தாங்கிநின்றான்

- கைலாயக்காட்சி...

கனிகண்ட சிவனும் மகிழ்வுற்று
கனிவோடு நாரதனை வரவேற்றான்
மகவிரண்டு கனியொன்றை வெட்டாமல்
மகத்துவமாய் கொடுத்திடவும் சொன்னானே!

- கைலாயக்காட்சி...

மூத்தவனுக்கே கனியென்றான் கணபதியும்!
கடயவனுக்கே கனியென்றான் குமாரவேளும்!
உலகத்தை வலம்வருபவனுக்கே கனியென்று
உமைபாகன் உரைத்தங்கு நின்றனனே!

- கைலாய்க்காட்சி...

மயிலேறி வலம்வரவே முருகனும்
மகிழ்வோடு புறப்பட்டு பறந்தானே!
ஞானக்கண் கொண்டவனோ கணபதியும்
ஞாலமே பெற்றோரென வலம்வந்தான்!

- கைலாயக்காட்சி...

கனிபெற்ற ஆனந்தத்தில் கணபதியும்
கலகமே நன்மையென்றான் நாரதனும்!
உலகைவலம் சுற்றிவந்த முருகனும்
வாங்கிடவந்த கனியோ அண்ணரிடம்

- கைலாயக்காட்சி...

சிவனிடம் முறையிட்டு மனம்வருந்தி
சினம்கொண்டு பழநிமலை சென்றடைந்தான்!
சிவனோடு உமையும் மலையேறி
சினம்விடுத்து வருகவென்று கேட்டனரே!

- கைலாயக்காட்சி...

அறிந்தாளே மூதாட்டி ஔவைக்கிழவியும்
அச்சிறு முருகனிடம் மன்றாடினாளே!
சொந்தமென்று எனக்கிங்கு எதுவுமில்லை
சொன்னான் கோவணாண்டி ஆகினானே!

- கைலாயக்காட்சி...

## மாறாம்புலத்து மாணிக்க விநாயகன்.

**இராகம்:- காபி** **தாளம்:- ஆதி**

**பல்லவி**

மாணிக்க விநாயகனைப் பாடிடவே! – எனக்கு
மனமெல்லாம் தமிழாலே பெருகுதையா!

மாணிக்க...

### அனுபல்லவி

காணிக்கை தந்துநின்றேன் விநாயகனே! – எங்கள்
ஆணிப்பொன்னே மாறாம்புல வேழமுகனே!

மாணிக்க...

### சரணங்கள்

நிழலெனவே தொடர்ந்துநிதம் வருபவனே! – பெரும்
குடையெனவே மழையினிலே இருப்பவனே!
அருவியென அருளள்ளி தருபவனே! – வரும்
சொல்யாவிலும் சுழியாகும் முதல்வோனே!

மாணிக்க...

அழகுமணி மண்டபங்கள் கோபுரங்கள்! - சூழ
அழகுரதம் பவனிவரும் திருத்தலமே!
வளம்பலவும் நிறைகின்ற மாறாம்புலமே! – வேழ
முகத்தவனே! நீவதியும் பெருந்தலமே!

மாணிக்க...

## வரமருளும் வடஅல்லை அரசடி விநாயகன்.

இராகம்:- மதுவந்தி தாளம்:- ஆதி

### பல்லவி

வரமருளும் வல்லவனே! கணபதியே! – எங்கள்

அரசடியில் அழகுதலம் கொண்டவனே!

வரமருளும்...

### அனுபல்லவி

எல்லையிலா பேரின்பம் தந்திடவே! – வட

அல்லையிலே நாம்கண்ட பேரொளியே!

வரமருளும்...

### சரணங்கள்

வானுயர்ந்த அரசமரம் குடைபிடிக்க! – மேவும்

அடியவர்கள் மனங்களிலே நீயிருக்க

நானென்ற அகங்காரம் அழித்திடுவாய்! – தாவும்

மனமெல்லாம் உனைநாட வைத்திருப்பாய்!

வரமருளும்...

கன்மவினை தீர்ந்திடுமே ஆனைமுகம்! – நாளும்

கணங்களையே அரசாளும் ஐந்துகரம்!

அகிலமதை உணர்த்திநின்ற மெய்ப்பொருளே! – சூழும்

அரசடியின் அடியவரின் காவலனே!

வரமருளும்...

## வடஅல்வை அரசடி விநாயகன் - II

இராகம்:- சிந்துபைரவி தாளம்:- ஆதி

### பல்லவி

கரமைந்தால் ஆளுமெங்கள் கணபதியே!
அரசடிப் பதிவாழும் ஆனைமுகத்தோனே!

கரமைந்தால்...

### அனுபல்லவி

வரம்பல வேண்டியுனை தொழுகின்றோம்!
வெற்றிகள் வந்திடவே பாடுகின்றோம்!

கரமைந்தால்...

### சரணங்கள்

நிழல்தரும் சோலையிலே நீயமர்ந்தாய்!
நீதியும் விளங்கிடவே அருள்பொழிவாய்!
இளநீரும் பால்கலந்து நீசுவைப்பாய்!
ஈன்றவர் மனங்குளிர நீநடந்தாய்!

கரமைந்தால்...

சொல்நயம் தந்தருள்வாய் சோபிதனே!
வல்வினை போக்கிடுவாய் விநாயகனே!
கல்லையும் கசியவைப்பாய் கரிமுகனே!
கனிரசம் தருகின்றோம் நீகுளிர்வாயே!

கரமைந்தால்...

## தட்டுக்களரி தலத்துறை நாயகனே!

இராகம்:- பூர்விகல்யாணி தாளம்:- ஆதி

### பல்லவி

அட்டதிக்கும் வசமான ஐங்கரப் பிள்ளையே!
தட்டுக்களரித் தலமாகி தனித்துவம் கொண்டவனே!

அட்ட....

### அனுபல்லவி

தொட்டுனைத் தொழுதிடவே துலங்கிடும் வம்சமது!
பட்டெழில் கண்பட்டு உயர்ந்திடும் செல்வமது!

அட்ட...

### சரணங்கள்

மேல்வதிரி எழில்மிகு பதிதனில் திருக்காட்சி!
மேன்மையுறும் பக்தருக்கு என்றுமுன் அருளாட்சி!
தர்மத்தின் வழிதோன்றி அறங்காக்கும் பிள்ளையே!
கர்வத்தை அடக்கியே ஞானக்கண் பெற்றவரே!

அட்ட...

அலங்கரித்து சோபனமாய் தோள்சுமந்து விழாவினிலே
அடியார்கள் மனமுருகி நிற்பதுவும் காண்பாயே!
நலமோடு வாழ்ந்திடவே நற்பயன் தந்தெம்
நானிலப் பிறவிப்பயன் பெற்றிட காப்பவனே!

அட்ட...

## பொலிகையில் வீரபத்திரர்க்கோர் திருக்கோயில்.

இராகம்:- ஸ்ரீரஞ்சனி　　　　　　　　　தாளம்:- ஆதி

### பல்லவி

பக்தர்கள் அலைமோதும் பொலிகையிலே — எங்கள்
வீரபத்திர சுவாமிக்கோர் திருக்கோவில்

பக்தர்கள்...

### அனுபல்லவி

எக்கணமும் மறவாது வாழ்வோமே! அவன்
தக்கதுணை என்றுமிருக்க மகிழ்வோமே!

பக்தர்கள்...

### சரணங்கள்

வீதியெங்கும் சோலையாகும் விருட்சங்கள் - தருமே
வீணையில் எழுந்துவரும் நாதங்கள்!
காதினில் ஒலித்திடுமே அவன்நாமம் - என்றும்
வீரபத்திர சுவாமியென்றே பொருள்பேசும்!

பக்தர்கள்...

சித்திரத்தேர் பவனிவரும் அழகனிவன்! — நாளும்
சித்திகளை நாம்பெறவே அருள்பவன்!
வித்திடையில் ஓங்கிவரும் பெருமரமாய் - எம்மை
விளங்கிடவே செய்திடுவான் அருமருந்தாய்!

பக்தர்கள்...

பொலிகண்டி பதியினர்க்கோ அருட்பிரசாதம் - அன்பர்
பொலிவுறவே வழங்கிடுவான் அருட்கடாட்சம்!
அழகுறவே அமைந்திட்ட ஆலயத்தில் - இருந்து
அவலங்கள் நீக்கிடுவான் தக்கதருணத்தில்!

பக்தர்கள்...

## கொற்றாவத்தை செட்டிதறை விநாயகனே!

இராகம்:- சிவரஞ்சனி　　　　　　　　　　　　தாளம்:- ஆதி

### பல்லவி

தொடங்கிடும் செயல்களுக்கு முன்னிற்பான்! – நாங்கள்
துதிக்கையிலே என்றென்றும் அருள்புரிவான்!

தொடங்கிடும்...

### அனுபல்லவி

மட்டில்லா பேரின்பம் நாம்பெறவே! – என்றும்
செட்டித் தறைப்பதியில் உறைபவனே!

தொடங்கிடும்...

### சரணங்கள்

நம்பியாண்டார் நம்பிக்கருள் செய்தவனே! – பெருந்
தும்பிமாமுக கடவுளே! கணேசனே!
செம்மையாய் உன்கோயில் வருவோர்க்கு – நல்ல
செம்மொழியால் பண்ணிசைக்க வைப்பவனே!

தொடங்கிடும்...

கனிவோடு பெற்றோரை உலகமென்று – மாங்
கனிபெற்றே அறிவினில் உயர்ந்தவனே!
துணிவோடு சுழிபோட்டு உன்பெயரால் - நல்ல
சித்திகளை வழங்கிடும் சித்திவிநாயகனே!

தொடங்கிடும்...

## தேவரையாளியின் தேவியம்மா!

இராகம்:- ஹிந்தோளம் தாளம்:- ஆதி

### பல்லவி

உண்ண மறந்தாலும் உறங்க மறந்தாலும் - என்றும்
உனை மறப்பேனோ! எங்கள்குல கண்ணகையே!

உண்ண...

### அனுபல்லவி

எண்ணத்தில் உனையன்றி வேறொன்றும் இல்லையம்மா!
தண்ணொளி தந்திடுவாய் தேவரையாளி தேவியம்மா!

உண்ண...

### சரணங்கள்

தளிர்மேனி தன்னிலே பட்டுடுத்து அழகாகி
தென்றலாலே சாமரங்கள் வீசியுமே நிற்போமே!
குளிர்ந்திட மனங்களிலே குளிர்த்தியும் வைத்துமே!
கும்பிட்டு உன்னருளை பெற்றின்பம் ஏகுவோமே!

உண்ண...

விரிசடை கோலமாய் விளங்கிடும் தெய்வமே!
விக்கினங்கள் வருங்கால் வந்தருகில் இருப்பவளே!
சரித்திர நாயகியே நீதிவழி நின்றவளே!
சிறப்புயர் செயல்களிலே சிங்கார நாயகியே!

உண்ண...

## தேவரையாளியுறை நரசிம்ம - கதிர்காமனே!

இராகம்:- அடானா தாளம்:- ஆதி

### பல்லவி

ஆறுபடை அரசாளும் அழகா — எனக்கு
ஆறுதலைத் தரவேண்டும் நரசிம்ம — கதிர்காமா!

ஆறுபடை...

### அனுபல்லவி

புற்றடியில் குடிகொண்டாய் செல்வக்குமரா — நாளும்
பற்றுடனே வேல்கொண்டு வினையறுப்பாய் சிவபாலா!

ஆறுபடை...

### சரணங்கள்

ஆதிசைவத் தமிழோங்கும் அறிவாளர்கள் வாழும்பதி!
அந்தணர்கள் வியந்திடவே ஆகமங்கள் நிறையும்பதி!
மாதிருவர் புடைசூழ மகிழ்ந்தமரும் புகழ்பூமி!
மன்னவனே என்றும் நீயிருக்கும் தேவரையாளி!

ஆறுபடை.....

இன்பக் கடலில் நாம்திளைக்க கலைமானாய்
எண்ணும் எழுத்தும் நாமறியக் குருவானாய்!
அன்பில் விளைந்த ஆரமுதாய் நீயானாய்!
அண்டம் காத்திடவே அழகுவேல் கைக்கொண்டாய்!

ஆறுபடை...

## அருட்கடலே குச்சத்து ஞானவைரவனே!

இராகம்:- பகுதாரி தாளம்:- ஆதி

### பல்லவி

பொன்னான வாழ்வளிக்கும் பொற்தலத்தில்! - என்றும்
சின்னாச்சிதாய்க்கு அருளீந்தாய் வைரவரே!

பொன்னான....

### அனுபல்லவி

கண்ணாக போற்றுமுயர் அடியவர்கள் - வாழும்
வடஅல்வை கோயில்கொண்டாய் அருட்கடலே!

பொன்னான...

### சரணங்கள்

அம்மணக் கோலத்தில் நீயிருக்க – நாமிங்கு
ஆடையணி கலங்கள் தந்திடலாமோ!
எம்மனைகள் யாவிலுமே சிறப்புயர! – நாளும்
ஏடிலங்க வைத்திடுவாய் ஞானச்சுடரே!

பொன்னான...

உயர்நிலை பேரின்பம் எதுவென்று – சொல்லி
உணர்த்தியே ஈடேற்றம் தருபவனே!
அயராது உனையெண்ணி வணங்கிடவே! – தினம்
அன்பொழுக நல்மனம் ஈய்பவனே!

பொன்னான...

## அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே!

இராகம்:- தாளம்:- ஆதி

**(கோரஸ்)**

கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்.
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!

**பல்லவி**

நல்லையிலே நாதன்புகழ் பாடுவோமே! - அவன்
நற்கருணை வேண்டியே ஆடுவோமே!
எல்லையிலா ஆனந்தத்தால் மகிழ்வோமே!
ஏறுமயில் வாகனனை போற்றுவோமே!

**(கோரஸ்)**

( கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்.
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!)

**அனுபல்லவி**

பண்ணிசைத்து நிற்கையிலே மனங்குளிரும்! - அவன்
எண்ணமெலாம் என்றுமெங்கள் மனதிருக்கும்
வண்ணமயில் காண்கையிலே எழில்தோன்றும் - தோகை
விரித்தாட வாணவில்லின் வகைதோன்றும்!

**(கோரஸ்)**

(கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்.
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!)

### சரணங்கள்

மாதிருவர் புடைசூழ வருவானடி - அந்த
மயக்கத்தில் கேட்டதெல்லாம் தருவானடி
சோதனைகள் வரும்போது அருள்வானடி - மலர்
சோலையிலே அழகுதனை இரசிப்பானடி!

**(கோரஸ்)**

(கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்.
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!)

கார்த்திகைப் பெண்களும் அணைத்திடவே - என்றும்
கார்த்திகேயன் என்றபெயர் பெற்றவனாம்!
ஆறுமுகமும் பன்னிரு தோள்களுமாய் - நல்லை
ஆழ்பவனே! அழகுதலம் கொண்டவனே!

**(கோரஸ்)**

(கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்.
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!)

அன்னையின் திருத்தலமோ நயினையிலே! - உந்தன்
அப்பனின் பெருந்தலமோ காரைநகரினிலே!
அண்ணனின் எழில்தலமோ! மருதடியினிலே! - முருகாவுன்
அழகுநிறை ஆலயமோ நல்லூரினிலே!

**(கோரஸ்)**

(கூடுவோம் பாடுவோம் ஆனந்தக் கூத்தாடுவோம்.
நாடுவோம் தேடுவோம் நல்லைநகர் நாதன்தலம்!)

## அயிட்டியப் - புலமுறை முருகா!

இராகம்:- மாண்டு தாளம்:- ஆதி

### பல்லவி

வற்றாத அருள்தரும் குமரபதி – எங்கள்
கொற்றாவத்தை அயிட்டியப்புல முருகன்பதி!

வற்றாத...

### அனுபல்லவி

பற்றொன்று மனதினிலே இருக்குதையா – உன்னாலே
சிற்றின்பம் காற்றாகி பறக்குதையா!

வற்றாத...

### சரணங்கள்

தீராது என்றெண்ணி வணங்கிடவே – வேலிங்கு
தீர்க்குமே எம்வினைப் பயன்களையே!
பாராளும் மன்னர்களும் பக்தியுடன்! – தொழுதிட
பேரின்பம் பெறவைத்த முருகையா!

வற்றாத.....

வேரூன்றிய பலமான விருட்சமாய் - எமக்கு
வந்துநிழல் தந்துநின்று காப்பவனே!
ஊரூராய் உன்புகழ் ஓங்கிடவே! – நல்ல
உளம்தந்து எமையாட் கொள்பவனே!

வற்றாத...

## எள்ளங்குள நாச்சிமார் என வழங்கும் முத்துமாரி

இராகம்:- பிலஹரி தாளம்:- ஆதி

### பல்லவி

தொட்டதெல்லாம் துலங்கவேண்டும் உன்னாலே! – நாங்கள்
பட்டதெல்லாம் மாறவேண்டும் உன்னருளாலே!

தொட்டதெல்லாம்...

### அனுபல்லவி

அட்டதிக்கும் அரசாளும் நாச்சியாரே! – உன்
பட்டொளி வதனமதை காட்டுவாயே!

தொட்டதெல்லாம்...

### சரணங்கள்

கடைவிழியின் பார்வையிலே வினையகலும் - உன்
இடையினிலே பட்டாடை அழகொளிரும்
அள்ளிடவே குறையாத அமுதமம்மா! – பதி
எள்ளங்குளம் கோயில் கொண்ட தேவியம்மா!

தொட்டதெல்லாம்...

ஆதிமணிக் கோபுரத்தின் ஒலியினிலே! – உந்தன்
ஆலயமே ஈடேற்றம் காட்டுதம்மா!
கோடிமுறை தொழுதிடவே வேண்டுமம்மா! – ராஜ
கோபுரங்கள் அலங்கரிக்கும் காட்சியம்மா!

தொட்டதெல்லாம்...

விருட்சங்கள் சோலையாகும் தலமம்மா! – அன்பர்
விரும்புவதை கொடுப்பவளும் நீதானம்மா!
அருந்தவமே செய்தோமே! உனைக்காண! – நாளும்
அனுக்கிரகம் கிடைக்குதம்மா உனைப்பாட!

தொட்டதெல்லாம்...

## புலோலி பல்லப்பை ஸ்ரீநரசிங்க வைரவர் திருவூஞ்சல்

### காப்பு

சீர்பூத்த பருத்தி நகர் மேவும்
செந்தமிழின் அருள் பெருகு புலோலியில்
பேர்பூத்த பல்லப்பை பதியில் வந்தமர்ந்தே
புரிதவப் பேரொளியாய் அருளும் செல்வன்
பார்புகழும் பைந்தமிழின் ஊஞ்சல் பாடிப்
புகழ்ஸ்ரீ நரசிங்க வைரவரும் சேர்ந்தேயாடக்
கார்பூத்த வண்ணமே கொண்ட வேழமுகக்
கணபதியின் பொற்கரங்கள் காப்ப தாமே!

### நூல்

பொன்மலரும் வேதங்கள் நாற்கால் களாக
புகழுமுயர் உபநிடதம் புனிதமிகு விட்டமாக
நன்மலரும் சிவஞானம் தாங்கும் கயிறதாக
நயங்கள் மிளிரும் ஓங்காரம் பீடமதாக
தேன்மலரும் சுவைதமிழின் ஊஞ்சல் மேவித்
தெய்வீக நிலைகாட்டி அமர்ந் தருளி
கண்குளிரக் கலைகள் மேவு பல்லப்பைக்
க(அ)ருள்ஸ்ரீ நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்!

மோனமிகு பக்தியெனும் கால்கள் நிறுத்தி

முறையோ டைம்புலன் களையோர் விட்டமாக்கி

ஞானமிளிர் நாற்கரண வடங்கள் மாட்டி

ஞாலமதில் திருவருட் பலகை பூட்டி

வானவர்காண் சீவனவன் ஊஞ்ச லான

வளமான முத்திதனை அருளும் தேவா!

தேனுலவும் பருத்திநகர் பல்லப்பை ஆளும்

தலமேஸ்ரீ நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல் !

பன்னிரு கைகளுடன் நாகமும் பூணூலாக

பாங்குடனே சந்திரனும் தலையினில் மேவ

மன்னுபுகழ் சிவனவனின் ருத்திர ரூபமாக

மதமடக்கும் சூலாயுதமும் அங்குசமும் கரத்திலாட

கன்னல்மிகு கனிகளுடன் பாலுந் தேனுமாக

கதியென்று வருமடியார் உனைநாளும் சூழ்ந்திட

நன்நகராம் பருத்தி துறையூர் புலோலியிலே

நயமிகுஸ்ரீ நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்

மணிச் சடையும் காற்றினிலே வீசியாட
மருவுமுனை திரிசூலமும் அபயமாகக் காட்டியாட
அணியும் உடைகளின்றி அம்மணமாய் ஆடஆட
அழகுதரு முப்புரிநூலு மிசைந்தே ஆடஆட
பணியுமன்பர் நோய்களையே தடுத்தே நீயுமாட
புகழ்செம் மணிச் செல்வனாய் நாளுமாட
அணிசெய் கல்வியினால் உயர்ந்திடு பல்லப்பை
அழகுஸ்ரீ நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்!

சீர்மருவு விஷ்ணுவின் அவதாரம் தானெடுத்தே
சிங்கத்தின் சிரசோடு மனிதனின் உடலுமாக
பேர்விளங் குமுயர் நரசிங்க ரென்றேயாகி
பாலகனாம் பிரக்லாதனை காத்தவனே! - போற்றி!
ஏர்விளங்க நாற்புற வயல்களும் சூழ்ந்திட
என்றுணர வைக்கும்பதி பருத்தியூர் புலோலியிலே!
பார்புகழ் ஆலயமாய் பல்லப்பை அமர்ந்திட்ட
புனிதனே ஸ்ரீ நரசிங்கா வைரவரோடு ஆடீரூஞ்சல்.

சங்குடன் சக்கர மேந்திமகா விஷ்ணுவும்
சங்கீதமாய் புல்லாங் குழல்தனை இசைத்திடவே
எங்குமருள் வல்லியாய் அன்னைமுத்து மாரியும்
ஏற்ற பொருள் மேலோங்க காவலிட
தங்குமருட் கடாட்சத்தால் கணபதி நாதனும்
தடைகள் வராது காப்பிற்கு முன்வர
பொங்குமலை தாலாட்ட பல்லப்பை பதியிலமர்
பரன்ஸ்ரீ நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்!

ஆணவமும் அகந்தையும் அயனோடு சமமிருக்க
அவன்தலை கிள்ளியுமே நீதிநெறி காட்டியவா!
பேணவரும் இந்திரனை பெரும்பே றடைய
பேரருளை தந்துநின்ற பெரும் தேவா!
காணவரும் அடியவர்கள் கரமிருக்கும் நிவேதனங்கள்
களிப்புடனே உண்டவர் குறைகள் தீர்த்தவனே!
பூணுமொரு நாமமாய் பல்லப்பை உறைபவனே
புண்ணியனே ஸ்ரீநரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்!

சூரியனும் வெண்குடையை கரத்தினில் ஏந்தச்
சந்திரனும் சூழலுமால வட்டம் சுமக்க
நேரிழையாள் மார்களெல்லாம் சுற்றி நின்றே
நேயமுடன் சாமரங்கள் தன்னை வீசிடவே!
கார்பூத்த ஸ்ரீநரசிங்கரும் துணையாக நிற்கவே
கானமிசைப் போர்களும் தாளமிட்டே ஒலியெழுப்ப
பாரிலெழில் பருத்திநகர் புலோலியூர் பல்லப்பை
பதியிலமர் வைரவ ஸ்வாமீ ஆடீரூஞ்சல்!

பல்லப்பை பதிநாடி வந்துனைப் பாடிட
பயன்களும் தருபவனே ஆடீர் ஊஞ்சல்!
நல்லசுவை கனிகளொடு வயற் செல்வமும்
நாடிவரச் செய்பவனே ஆடீர் ஊஞ்சல்!
வல்லகலைச் செல்வமொடு கல்விதனை வாரியென்றும்
வந்தார்க்கு கொடுப்பவனே ஆடீர் ஊஞ்சல்!
செல்வநகர் புலோலியூர் பல்லப்பை பதியுறை
செல்வமே ஸ்ரீநரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்!

முக்கண்ணனின் மூலவரே முத்தே ஆடீரூஞ்சல்!

முத்திக்கு வழிகாட்டும் ஐயனே ஆடீரூஞ்சல்!

தக்கனின் ஆணவத்தை அழித்தவனே ஆடீரூஞ்சல்!

தண்ணொளி கண்களுடை ரூபனே ஆடீரூஞ்சல்!

அக்கறை மிகக்கொண்டு அக்கமணி தரித்தவனே!

அண்டங்கள் அனைத்தும் ஆள்பவனே ஆடீரூஞ்சல்!

எக்கணமும் நினைக்கையில் காட்சிதரும் பல்லப்பை

எழில்மிகு ஸ்ரீநரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல்!

**வாழ்த்து**

முன்நின்று பொருளீய்ந் தோர்கள் வாழி!

முழுமைபெற வைத்திட்ட அந்தணர்கள் வாழி!

என்றென்றும் வேதமோதும் வேதியர்கள் வாழி!

எழில்மிகு பல்லப்பை மக்கள் வாழி!

நன்றிதை செய்திட வழிதந்தார் வாழி!

நற்கற்புடை மங்கையரும் வாழி வாழி!

நன்னிலம் பருத்தி துறையூர் புலோலியிலே

நற்றலமாம் பல்லப்பை என்றென்றும் வாழி!

## மங்களம்

மங்களம் சுபமங்களம் மங்களம் ஜெயமங்களம்!

எங்கும் நிறையருளும் ஸ்ரீநரசிங்கருக்கு மங்களம் !

பொங்கும் அருள்தரும் வைரவருக்கு மங்களம்!

பாங்கான சிவவடிவம் பெற்றவர்க்கு மங்களம்!

காவலுக்கு நிற்பவனே கரிமேனியனே மங்களம்!

காவடிகள் கரகமுடன் கலைநிறைபவனே மங்களம்!

சேவடிகள் தொழுபவர்க்கும் தித்திக்கும் மங்களம்!

ஆவலுடன் தொண்டாற்றும் பக்தர்களுக்கும் மங்களம்!

## பராக்கு

தமருகம் கரமேந்தும் தண்ணொளியே பராக்கு!

தண்டலை தலைக்கணி தேவா பராக்கு !

அகமமர் பல்லப்பை பதியே பராக்கு !

அழகுதிரி சூலப் படையோய் பராக்கு!

சிங்கமா முகனே சீலனே பராக்கு!

சிறுவன் பிரகலாதனை காத்தோய் பராக்கு!

எங்குமருட் புரிதவத்தோய் ஏகாந்தனே பராக்கு!

எழில் நிறை விஷ்ணுவின் வடிவோய் பராக்கு!

பேரருள் ஈயும் வைரவா பராக்கு!

பாரினைக் காத்திடும் பரனுக்கு பராக்கு!

காரணப் பொருளே கபாலபூஷணா பராக்கு!

கனிநிறை பல்லப்பை கோயிலே பராக்கு!

**எச்சரிக்கை**

தலைமாலை அணிந்தவர்க்கு எச்சரிக்கை!

திரிசூலம் ஏந்தியவா எச்சரிக்கை !

மலைமா மார்பவனே எச்சரிக்கை!

மதிசூடும் சடையோய் எச்சரிக்கை!

கனலேந்தி தடிதூக்கிடும் கபாலி எச்சரிக்கை!

கரிவண்ணன் கஜலக்குமியை ஆள்பவனே எச்சரிக்கை!

வனப்பான பல்லப்பை மூலவனே எச்சரிக்கை!

வளர்தெங்கு சோலையனே புகழ்வாய் எச்சரிக்கை!

## லாலி

கருணை வடிவோனே லாலி சுபலாலி!
கரியமேனி கொண்டவனே லாலி சுபலாலி!
அருளீயும் அன்புளமே லாலி சுபலாலி!
அழகுறும் மணியனே லாலி சுபலாலி!

அகந்தைதனை அழித்தோய்க்கு லாலி சுபலாலி!
அகிலமுணர் காவலனே லாலி சுபலாலி!
சுகமளிக்கும் சுந்தரர்க்கு லாலி சுபலாலி!
சுகநலம் பல்லப்பைக்கு லாலி சுபலாலி!

திரிசூல நாயகர்க்கு லாலி சுபலாலி!
திகழ்விஸ்வ ரூபர்க்கு லாலி சுபலாலி!
உரிதலை ஏந்துவார்க்கு லாலி சுபலாலி!
ஒண்பொருளே வைரவர்க்கு லாலி சுபலாலி!

இரணியனை அழித்தவர்க்கு லாலி சுபலாலி!
இகம்விடு தலையானதிற்கே லாலி சுபலாலி!
அரனொடு உறவோர்க்கு லாலி சுபலாலி!
ஆதிதலம் நாயகர்க்கு லாலி சுபலாலி!

சுபம்

## குழுதெணி பதிமேவும்
## குஞ்சர முகத்தோனே!

இராகம்:- தோடி தாளம்:- ஆதி

பல்லவி

அதிசய விநாயகனே சரணமையா - உன்னை
கதியென்று போடுகிறோம் தோப்புக்கரணமையா!

அதிசய ...

அனுபல்லவி

அமுதள்ளி கொடுக்கின்ற பக்தர்கள் வாழும்
குழுதெணி பதிமேவும் குஞ்சர முகத்தவனே!

அதிசய ...

சரணங்கள்

அலைகடல் ஓசையுன்னை தாலாட்டி நிற்குதையா!
அழகுமணி மண்டபங்கள் உன்னருளை காட்டுதையா!
தலைமகனே! தத்துவத்தை உணர்த்திடும் கணபதியே!
தந்தைதாய் உலகென்று உரைத்திட்ட குணநிதியே!

அதிசய ...

ஐந்தெழுத்து மந்திரத்தை மனதினிலே உச்சரிக்க
உனைத்தந்த அடியவரும் எம்மனதில் வாழ்கின்றார்!
பைந்தமிழில் புலமைபெற்று எம்பதியும் விளங்கிடவே!
பக்தியுடன் கல்விதனைத் தந்திடுவாய் சிவநிதியே!

அதிசய .....



கண. எதிர்வீரசிங்கம்

## அழகுமணித் தேரேறும் அரசடி விநாயகனே!

**2014**

இராகம்:- பூபாளம் தாளம்:- ஆதி

வெண்பா

அல்வாயூர் வடபால் அரசடியில் அமர்ந்த
நல்யானை முகத்தோனே! நலநிதியே! - வல்லமைகள்
தந்திடும் நாயகனாய் தேரேறி வருகின்ற
தொந்தி வயிற்றோனே! துணை!

பல்லவி

அழகுமணித் தேரசைய மனம் மகிழுது - காண
அரசடியில் பக்தர் கூட்டம் வந்துசேருது!

அழகுமணி ...

அனுபல்லவி

உளமறிந்து கருணைமழை பொழிந்திடுவான் கணபதி – எம்மை
வளமோடு வாழவைத்துக் காப்பதிலே அதிபதி!

அழகுமணி ...

சரணங்கள்

பஞ்சமுக காட்சியினை காண்பதுவும் பேறாகும் - அவனால்
பற்றிவரும் வினைகளெல்லாம் அழிந்துமே நீறாகும்!
தஞ்சமென வருவோர்க்கு ஐந்துகரம் நீட்டிடுகின்றான் - இன்று
தேரேறிவந்து எழில்மிகு தோற்றத்தை காட்டிடுகின்றான்!

அழகுமணி ...

பவளக் கால்நாட்டி செதுக்கிவைத்த தேரினிலே - எங்கள்
புண்ணியன் வீதிவழி வருகின்றான் நேரினிலே!
தவமுனிகள் போற்றிநின்ற அரசடித் தலத்தினிலே - இன்று
பொலிவுறும் தேரேறி வருகின்றான் களிப்புறவே!

அழகுமணி ...

வடம்பிடித்து இழுக்கையிலே வன்மமெலாம் நீங்குதையா - உன்னை
வாயாரப் பாடிடவே மனமிங்கு பரவசமாகுதையா!
இடரென்றும் வருகையிலே இங்கெமை காத்திடவே - இன்று
எழில்மிகு தேரேறி வருகின்றான் இன்புறவே!

அழகுமணி ...

காவடிகள் கரகமுடன் பக்தரெல்லாம் ஆடுகின்றார் - ஒளிரும்
கற்பூரச் சட்டிகளை பக்தைகளும் சுமக்கின்றார்!
ஆவலுடன் இளைஞர்களும் பஜனைதனைப் பாடுகின்றார்-இன்று
அழகுரதம் மீதிலேறி ஆனைமுகன் வருகின்றான் !

அழகுமணி ...

தேரடியை அங்கமதால் அழித்திட ஒருகூட்டம்! - தங்கள்
தேவைகளை சொல்லியே வணங்கிடவே ஒருகூட்டம்!
வாரணனை வடம்பிடித்து இழுத்திட ஒருகூட்டம்! - இன்று
வடிவுறும் தேரேறிவந்து போக்குகிறார் மனவாட்டம்!

அழகுமணி ...

சித்திரத் தேரேறி வருகின்றான் ஐங்கரன் - பல
தத்துவங்கள் உரைத்திடும் சிற்பங்களும் மிளிர்ந்திடவே!
வித்தகனாய் அரசடிப் பதியாளும் அங்குசன்! - இன்று
வனப்பான பவளத் தேரேறி வருகின்றான்.!

அழகுமணி......

சிந்தையில் அவன்நாமம் செப்புதல் நன்றாகும் - என்றும்
சீரியவாழ்வு பெற்றிட கணபதியின் அருளாகும்!
முந்தைய வினைபோக்கி அழித்தலை புரிந்திடவே! - இன்று
முத்துரதம் மீதிலேறி முக்கண்ணன் வருகின்றான்!

அழகுமணி....

## வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலயம்
## கொடியேற்றம் - 01.08.2014

**கோடியின்பம் பெருகுதையா...**

முத்தமிழ் முகிழ்ந்திட கல்வியும் அரணாக
முப்பொருளும் துலங்கிடும் பூவற்கரை பதிதனிலே!
வித்தகன் கணபதியும் மஹோற்சவம் கண்டிட
விக்கினங்கள் தீர்த்தருளும் ஆனந்தக் கொடியேற்றம்!
தத்துவங்கள் பலசொல்லி தாய்தந்தை உலகென்று
திகழ்முனி வியந்திட வைத்திட்ட பிள்ளையே!
அத்தனை அடியவர்கள் உனைவைத்து சேர்ந்தின்று
அருட்கொடி ஏற்றிட கோடியின்பம் பெருகுதையா!

வீரகேசரி

## வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலயம்
## தேர்திருவிழா - 09.08.2014

**சித்திரத் தேரேறி வருகின்றான்!**

வானளந்த விருட்சங்கள் நிழல்தந்து குடைபிடிக்க
வனப்பான மலர்ச்சோலையில் வண்டினங்கள் கானமிசைக்க
ஆனந்தப் பெருவெள்ளம் அடியவர்கள் கண்களிலே
அருவியாகி வழிந்தோடி ஆரோகரா ஒலிமுழங்க
நானென்ற ஆணவமும் அகந்தையும் அழிந்தின்று
நற்பேறு தந்திடவே பூவற்கரையில் பஞ்சமுகனாய்
வானவரும் மலர்தூவி கட்டியம் கூறிடவே
வடிவுறும் சித்திரத் தேரேறி வருகின்றான்!

வீரகேசரி

## வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலயம்
## தீர்த்தத்திருவிழா - 10.08.2014

**வனப்போடு தீர்த்தமாடி வளமெலாம் தருவாயே!**

பதிபூவற் கரையாளும் ஐங்கர முடையோனே!
பெருமிடர் வருங்கால் வினையகல அருள்வோனே!
கதியென்று உன்னடியை தொழுவோரின் நிலையறிந்து
காவலனாய் சுற்றியெமை காத்திடும் கணபதியே!
மதிநிறை செயலினால் கனிபெற்ற மூலவனே!
மருவினிய தேவர்களை மீட்டன்று நின்றவனே!
வதிரியிலே மஹோற்சவம் நிறைவுறவே இந்நாளில்
வனப்போடு தீர்த்தமாடி வளமெலாம் தருவாயே!

வீரகேசரி

## ஊழ்வினைகள் அழித்திடு ஐங்கரா!

**இராகம்:** **ஆபோகி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

அசைந்துவரும் தேரினிலே அவனழகை பாருங்கள்
இசைத்துவரும் பாடலிலே அவன்புகழை பாடுங்கள்

அசைந்துவரும்...

**அனுபல்லவி**

எண்திசையிலும் பக்தர்கள் பல்லாண்டை பாடிடவே!
வெண்குடை சாமரங்கள் புடைசூழ்ந்து அழகுறவே!

அசைந்துவரும்...

**சரணம்**

உக்கிர மூர்த்தியாய் பஞ்சமுகன் நிலைமாறி
ஊழ்வினைகள் அழிந்திடவே ரதமேறி வருகின்றான்!
தக்கவழி பெற்றதுமே சாந்தமாகி மனந்தணிந்து
எக்கருமம் ஆனாலும் முன்வருவான் ஆசிதந்து!

அசைந்து....

எழில் கொஞ்சும் பூவற்கரையிலே சித்திரத்தேர் காட்சிபார்
களிப்புடனே வடம்பிடிக்கும் பக்தர்களின் கூட்டம் பார்
காவடிகள் கரகமுடன் கற்பூரச் சட்டிகளும்
பூவற்கரை வீதிகளை வலம்வந்து அலங்கரிக்க

அசைந்து.....

## கற்றிட வழிகாட்டும் ஆசானாய்

இராகம்:- தேனுஹ தாளம் :-ஆதி

### பல்லவி

தேரழகைக் காணக்கண் ஆயிரம் வேண்டுமிங்கே!
பேரழகைச் சொல்லிடவோ வார்த்தைகளை தேடுநெஞ்சே!

தேரழகை...

### அனுபல்லவி

சிற்பங்கள் கலைமிளிரும் சித்திரத் தேரினிலே
கற்பக தருவாய் கணபதியும் வருகின்ற

தேரழகை.....

### சரணங்கள்

பொற்பதங்கள் துணையென்று பண்ணிசைத்து புகழ்பாடும்
விற்பன்னர் வாழுமிப் பதிதனிலே தேர்ப்பவனி
கற்றுயர வழிகாட்டும் ஆசானாய் அங்குசனும்
கலைமிளிர எழுந்தருளி காட்சிதரும் இந்நாளில்!

தேரழகை....

தத்துவமாய் பொருளுரைக்கும் சித்திரத் தேரமைத்து
தந்திட்ட மக்களுக்கு சுரந்திடுவான் நல்லருளை
வித்தகனை மலர்களால் அலங்கரித்து அழகுறவே
விளங்குமுயர் காட்சிதந்து வலம்வருகின்ற மகோற்சவத்தின்

தேரழகை....

அன்னை உமாதேவியுடன் ஆறுமுகனும் சேர்ந்திடவே!
மன்னவனாய் வீற்றிருக்கும் மூஷிகவாகனனே! - முதற்கொழுந்தே!
இன்பமுடன் நீராடிநீ மகிழ்ந்திடவே தீர்த்தக்கேணியை
திண்ணமாய் அருள்பாலித்தே நிற்பவனே உந்தன்

தேரழகை....

## வதிரி மாவடி அண்ணமார் ஆலயம்.

இராகம்: திலங்கு                    தாளம்: ஆதி

**மங்காத நற்கல்விதனை தாரும்!**

### பல்லவி

அஞ்சுதலை நீக்கிடுவாய் அண்ணமாரே! எங்கள்
பஞ்சுதோட்ட பதிதனிற்கு பொற்காவலனே!

அஞ்சுதலை...

### அனுபல்லவி

பொங்கலிட்டு மடைபரவி தொழுவோமே! - உன்னால்
மங்காதுநற் கல்வியிலே எழுவோமே!

அஞ்சுதலை...

### சரணம்

கண்விழித்துப் பார்த்திடவே தெரிபவனே - மன
வன்மங்கள் போக்கிடவே அருள்பவனே!
எண்ணிய கருமங்கள் செயல்பெறவே! - தினம்
கண்ணிமையை காப்பதுபோல் இருப்பவனே!

அஞ்சுதலை...

ஞாயிறுதோறும் பஜனைபாடி மகிழ்வோமே! - உன்னை
ஞாலம்புகழ வைக்கின்றோம்! உயர்வதனால்
விளக்குமிட்டு ஆதரித்தார் கார்த்திகேசுவும்! - இன்று
விஞ்சுமுயர் ஆலயமாய் மிளிர்கிறதே!

அஞ்சுதலை..

## பக்தி ஆறோடும் மாலுசந்திப்பதி

இராகம்:- பாகேஶ்ரீ தாளம்:- ஆதி

**பல்லவி**

வேழமுகன் வந்தெம்மை ஆளுமையா! என்றும்
வாழவழி காட்டிநிதம் நிற்குமையா!

**அனுபல்லவி**

தீராத வினைகளையும் தீர்ப்பவனே! பக்தி
ஆறோடும் மாலிசந்திப்பதி உறைபவனே!

வேழமுகம்...

**சரணம்**

நீராட திருக்கேணி கொண்டவனே! உன்னால்
நீறாகிப் போகுமையா வினைகளெல்லாம்!
சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திடவே! கண்ணில்
காட்சிதந்து அருள்புரிவாய் கஜமுகனே!

வேழமுகம்...

உன்வாசல் வருகின்ற வேளையெல்லாம் - நாங்கள்
உன்னன்புப் புன்னகையில் திளைக்கின்றோம்!
பொன்னென்ன பொருளென்ன இருந்தாலும் - உன்தன்
பொன்னொளி மேனிக்கு ஈடாகுமா!

வேழமுகம்...





மரபுக் கவிதைகளைச் சந்தச் செழிப்போடு எழுதுவதில் நீண்டகால முதிர்ச்சி கொண்ட கவிஞராகவும் நாடகம், கட்டுரை போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்ட திறனாளராகவும் ஈழத்தின் சைவாலயங்கள் மீது எண்ணற்ற கீர்த்தனைகளையும் ஊஞ்சற்பாக்களையும் இயற்றியிருக்கும் சைவப்புலவராகவும் ஆன்மீகப் பணியாளராகவும் சமூகத் தொண்டனாகவும் கடந்த பல ஆண்டுகளாக அர்ப்பணிப்போடு பணியாற்றி வருபவர் தமிழிசைச் செம்மல் வதிரி கண.எதிர்வீரசிங்கம்...

ஆலய வரலாறுகளையும், கடவுளரின் பெருமைகளையும் பக்திரசம் பொங்கத் தெள்ளுதமிழில் அழகுறு பாடல்களாக லயக் கட்டுமானம் பிசகாமல் சந்தம் தவறாமல் வரகவிப் புலவர்போல சரளமாக எழுதுவதில் வல்லவரான இவர்....

**- தவநாதன் றொபேட் -**
சிரேஷ்ட விரிவுரையாளர்
நுண்கலைப் பீடம்
யாழ்.பல்கலைக் கழகம்

உதயனி
03.02.2013.



ISBN978-955-41950-0-4

9 789554 195004

Mathuran Graphics & Offset Printers, Alvai. 0776688318, 021 226 3099. e-mail-mathurangraphics@gmail.com